

# ரமணோதயம்

ஏப்ரல் 2025
காலாண்டு

ஆராதனை இதழ்
விலை ₹ 20



குரோம்பேட்டை ரமணாலயத்தில் 9/3/2025 அன்று
நடைபெற்ற புனர்வசு தின சிறப்பு நிகழ்ச்சிகளின் தொகுப்பு

உதயம் 24 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஆராதனை இதழ்

ஏப்ரல் 2025

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:

ஆ. குமார் ராஜா: 9444261296

மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:

ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்

41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2025


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 11 |
| 3 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 15 |
| 4 | டி. ஆர். கனகம்மாளின் அருந்தவ வாழ்வு-1 | மா. முருகேசன் | 23 |
| 5 | அனுபூதியருள் | ஸத்ய நாராயணன் | 35 |
| 6 | தனித்துவமானவர் – நம் ரமணர் | டாக்டர். வேங்கட் S. ரமணன் | 39 |
| 7 | இனிவரும் திருநாட்கள் | | 47 |
| 8 | ஆதிசங்கரரின் பக்தி வேதாந்தம் | டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன் | 49 |
| 9 | ரமண புராணம் | ஆகுரா | 57 |
| 10 | வீணாம் நினைவே துன்பம் | D. தியாகராஜன் | 67 |
| 11 | செய்திகள் | | 75 |

# ஆசிரியர் உரை

## அச்சம் தவிர்க்கும் ஆசான்

பகவானின் வழிகாட்டுதலின் முக்கியமான ஒன்று அச்சம் இன்மை. நித்யா நித்ய வஸ்து விவேகம் நம்முள் பூர்ணமாகும்போதே அச்சமின்மையும் ஜனிக்கின்றது. இது நம்முடைய வஸ்து. நம்முடன் நிரந்தரமாக இருப்பின் நமக்கு மகிழ்ச்சி உண்டாகும் என்று நாம் மகிழ்ச்சி கொள்கிறோம் உண்மையில் இது எதுவுமே நிரந்தரமில்லை. எந்த வினாடியும் நம்மை விட்டு போய்விடும். அதற்கு எப்போதுமே ஆயத்தமாக இருந்தால் அச்சம் நீங்கி விடுகிறது. உலகில் எதுவும் நிரந்தரமில்லை; ஆன்மா ஒன்றே நிரந்தரம் என்று பேரறிவு சித்திக்கும்போது அச்சம் அழிந்து அச்சமின்மை சித்திக்கின்றது.

ஆத்ம விலாசம் 18 ஆவது ஸ்லோகத்தில் ஸதாசிவேந்திர சரஸ்வதி விளக்குகிறார்:

**ஸவித்ரமபி ஸீதருஸௌ சந்த்[3]ரே**
**திஷ்ணேஸ்ப்யதோ வஹத்யக[3]சனௌ**
**மாயிகமிதி ஜானன் ஜீவன் முக்தோ**
**ந விஸ்மயி பவதி:**

சூரியனுடைய கிரணங்கள் இயல்புக்கு மாறாக குளிர்ச்சியைத் தந்தாலும், சந்திரனின் கிரணங்கள் உஷ்ணத்தைத் தந்தாலும், மேல்நோக்கிச் செல்லும் அக்னி ஜ்வாலை கீழ் நோக்கிச் எரிந்தாலும் இதெல்லாம் மாயையின் செயல்கள் என்று அறிந்த ஞானி இதைக் கண்டு மயங்கவோ ஆச்சர்யப்படவோ மாட்டான்

என்கிறது இந்த ஸ்லோகம். எது மெய், எது பொய் என்று உணர்ந்த அறிஞன் எதையும் லட்சியம் செய்யாது நித்ய சாதகனாய் இருப்பான் என்பது பகவானின் உபதேசம்.

ஞான விசார படலத்தில் இது குறித்து பகவான் தெளிவாகக் கூறுகிறார்.

நானே பரப்பிரம்ம நாதன் உலகுக்கு ஈசன்
ஆனா இந்நிச்சயம் ஆர்புருடன் தானேநன்
முத்தனாம் அன்றி முரண்வழியில் செல்புருடன்
பெத்தனாம் என்று பேண்.

நான் என்னும் எனது உண்மை ஸ்வரூபமே பரப்பிரம்மம். ஸத்குருவின் ஸ்வரூபமே உலக காரண கர்த்தாவாகிய ஈஸ்வர சொரூபம் எனும் உண்மையை அறிந்து அதில் இருந்து நழுவாமல் இருப்பவனே முக்த புருடன். இதற்கு மாறுபட்ட அநித்யமான நிலையற்ற பொருட்களை நாடி முரண் வழியில் செல்பவன் உலக மாயையில் கட்டுப்பட்டவன் ‘எது உண்மை’ என்று அறிந்து எதனாலேயும் குழம்பாமல் சத்யத்தில் நிலைத்திருப்போனே ஞானி.

எது நித்யம், எது அநித்யம் என்பதை அறிந்தவன் மனக் கலக்கமுறான் என்பதை மஹா பாரதத்தில் வரும் நிகழ்சசி தெளிவுற விளக்குகிறது. சூதாட்டத்தில் தோற்ற பாண்டவர்கள் நிபந்தனைப்படி பன்னிரண்டு வருட வனவாசமும் ஒருவருடம் விராட தேசத்தில் அஞ்ஞாத வாசமும் முடிந்த பின்னர், ஆட்ட விதிப்படி தனது ராஜ்யத்தையும் அரசுரிமையையும் பெற விரும்பினர். அமைதியை நாடும் சாத்வீகனாகிய யுதிஷ்டிரன் தம் நாட்டைத் திரும்பிப் பெற பொறுமையும் திறமையும் நா வண்மையும் கொண்ட ஒருவனைத் தூதனாக அனுப்ப விரும்பினான். இதற்கு மிகத் தகுதியானவன் பகவான் கிருஷ்ணனே என்று அறிந்த யுதிஷ்டிரன் பகவான் கிருஷ்ணரிடம், நீங்கள்தாம் தூதராகச் செல்ல வேண்டும் என்ற தனது கோரிக்கையை சமர்ப்பித்தான்.

“எனது தம்பிகள் மிகக் கோபத்துடன் பழி வாங்கத் துடிக்கின்றனர். பீமனும் அர்ஜுனனும் எப்படியாவது போர் தொடுத்து, கௌரவர்களை அழித்து பாண்டவ சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்று உறுதியாக இருக்கின்றனர். நானோ சமாதானத்தை விரும்புகிறேன். போரை நான் சற்றும் விரும்பவில்லை. முதலில் பாதி ராஜ்யத்தைக் கேள். தரவில்லையெனல் படிப்படியாக ஐந்து ஊர்கள் கேள். அதையும் மறுத்தால், ஐந்து வீடுகள், இல்லையெனில் ஒரே ஒரு வீட்டையாவது தருவதாக இருந்தால் அதை ஒப்புக் கொண்டு திரும்ப வந்துவிடு. போர் வேண்டவே வேண்டாம்” என்கிறான்.

“தர்மபுத்திரனே! போரைச் சற்றும் விரும்பாத உனது அமைதி நாட்டம் எனக்கு ஆனந்தம் அளிக்கிறது. நீ கூறியபடி வீடுகளையாவது கேட்டுப் பார்க்கிறேன். செல்வதற்கு முன் பாண்டவரிடமும் திரௌபதியிடமும் விடை பெற்றுச் செல்கிறேன்” என்றார்.

பீமார்ஜுனர்கள் கோபாவேசமாய், “வீட்டை யாசகம் கேட்டுப் பெறுவதை நாங்கள் விரும்பவில்லை. நமது பலத்தினாலும் அஸ்திர சக்தியினாலும் வெல்லுவோம் நாங்கள். அதோடு மண்டபத்தில் எடுத்த சபதத்தையும் பூர்த்தி செய்வோம்” என்றனர். நகுலனும் அதையே சொன்னான். திரௌபதியோ “நீ பேசுவது தர்மம் அல்ல. அவர்கள் ஐந்து வீடுகளை தந்து விட்டால், என் சபதம் பூர்த்தி ஆகாமல் நான் அவிழ்ந்த கூந்தலுடனேயே திரிய வேண்டுமா?” என்று கொதித்தாள். “நீங்கள் அனைவரும் துரியோதனுடன் ஒப்புக் கொண்டு, போரை நிறுத்தினாலும் நான் அபிமன்யு, எனது சகோதரர்கள், கடோத்கஜன் இவர்களைக் கொண்டு படை திரட்டி கௌரவர்களை வதைப்பேன்” என்றாள்.

அதற்கு கண்ணன், “உங்கள் சபதம் நிச்சயமாக நிறைவேறும். நான் சகாதேவனையும் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு அஸ்தினாபுரம் செல்கிறேன்” என்றான்.

சகாதேவனிடம் சென்ற கண்ணன் “உலகில் யுத்தம் வராமல் அமைதி நிலவுவதே என் நோக்கம். அதற்காகவே இப்போது அஸ்தினாபுரம் செல்கிறேன். நீ சிறந்த அறிஞன் ஆயிற்றே. போரைத் தடுக்க ஏதேனும் வழி இருக்கிறதா என்று சொல்” என்று கேட்டான்.

சகாதேவன் சிரித்து விட்டு, “போர் வராமல் தடுக்க உபாயம் வேண்டுமா? இப்போதே சொல்கிறேன்.” என்றான். குருக்ஷேத்திரப் போரை வராமல் தடுக்க அல்ல. விரைவில் வரவழைக்கவே கண்ணன் செல்கிறான் என்பது சகாதேவனுக்குத் தெரியும் எனவே ஒரு வழி சொன்னான்.

கண்ணா, “பீமனது கதாயுதத்தை உடைக்க வேண்டும். அர்ஜுனன் வில்லை ஒடிக்க வேண்டும். பாஞ்சாலி கூந்தலை அறுக்க வேண்டும். கர்ணனை சக்ரவர்த்தியாக முடிசூட்ட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நீ எங்கும் செல்லாமல் கை கால்களை கட்டிப் போட்டால் மாபாரதப் போர் வராமல் தடுக்க இயலும்” என்றான்.

கண்ணன் சிரித்து விட்டு, “மற்றவற்றையெல்லாம் ஒருவாறு செய்து விடலாம். என்னை உன்னால் கட்டிப் போட முடியுமா? எது எப்படி சாத்தியம்?” என்றான். சகாதேவன், “ஏன் முடியாது? என்னால் முடியும்” என்றான். கணப்பொழுதில் கண்ணன் பல்லாயிரம் வடிவுகளை எடுத்து வையம் முழுதும் வியாபித்து, “என்னை எப்படிக் கட்ட முடியும்? நான் எல்லா இடத்திலும் பரவி உள்ளேனே? இத்தனை வடிவங்களை எங்ஙனம் கட்டுவாய்?” என வினவினான். சகாதேவன் சற்றும் கலங்காமல், தியானத்தில் அமர்ந்து கண்ணனின் ஆத்ம ஸ்வரூபத்தை மனதில் தியானித்தான்.

ஓம் நமோ விஸ்வரூபாய விஸ்வ சித்யந்த ஹேதவே
விஸ்வேஸ்வராய விஸ்வாய கோவிந்தாய நமோ நமஹ
கிருஷ்ணாய கோவிந்தாய கோபி நாதாய நமோ நமஹ

இந்த அகிலம் முழுதும் பரவியுள்ள அனைத்திலும் அடங்கியுள்ள பரமாத்ம நீ ஒன்று தானே என்று தியானிக்க கண்ணன் எடுத்த வடிவங்கள் அனைத்தும் ஒன்றேயாகி சகாதேவனின் இதயத்தில் கட்டுப்பட்டு ஒன்றாக நின்றது.

கட்டுப்பட்ட கண்ணன், "சகாதேவனே! நீ வென்று விட்டாய். உன்னுடைய ஆத்மார்த்த பக்தியாலும் ஒன்றேயான தியானத்தினாலும் என்னை கட்டிப் போட்டு விட்டாய். இப்போது என்னை கட்டவிழ்த்து விடு" என்று கேட்டான்.

கண்ணா, "உன் கட்டுக்களை அவிழ்த்து விடுவதானால் எனக்கு ஒரு வரம் தர வேண்டும்" என்றான். "எது வேண்டுமானாலும் தருகிறேன். என்னைக் கட்டில் இருந்து அவிழ்த்து விட்டால் போதும்" என்றான்.

"பாரதப் போரில் குந்தி புத்திரர் ஐவரையும் காப்பாற்றுவதாக வரம் கொடு" என்றான்.

கண்ணன், "சகாதேவா, சற்று யோசி? ஏதேனும் விட்டுப் போயிருந்தால் அதையும் சேர்த்துக் கேள்" என்றான். "இல்லை. இதுவே போதும்" என்றான். சகாதேவன். அவசரத்தில் ஆறாவது புத்திரனான கர்ணன் உயிரையும் காப்பாற்றுமாறு வரம் கேட்கவில்லை. எனவே குந்தி புத்திரனான கர்ணன் மாண்டான்.

இங்ஙனம் பலகோடி கிருஷ்ணர்களை ஒன்றாய் ஒடுக்கி தன் மனத்தில் கட்டிவிட சகாதேவனால் எப்படி முடிந்தது?

பகவான் இதற்கு விளக்கம் தருகிறார். "அநித்யமானதை விட்டு விட்டு நித்யமானதை பிடித்துக் கொள்வதுதான். 'விதி' எனப்படும்" என்கிறார் பகவான். கண்ணன் தோற்றுவித்த உருவகங்களை அனைத்தும் அநித்யமானவை அவற்றை விடுத்து இறைவனை உள்ளொளிர் ஆத்மாவையே விடாமல் பற்றி இருந்தால் சகாதேவனால் இதைச் சாதிக்க முடிந்தது.

எப்போதெல்லாம் மனம் தனது ஜன்ம ஸ்தானத்தை வட்டு நழுவுகிறதோ. அப்போதெல்லாம் அதைப் பிடித்து இழுத்து ஆன்மாவில் பதிப்பதே ஆன்ம ஞானத்திற்கு ஒரே வழி. அப்போது தியானம், மந்திரம், ஜபம் போன்ற வேறு எதுவுமே தேவையில்லை என்கிறார் பகவான்.

மனம் ஆன்மாவைத் தவிர வேறு ஒன்றை நினைப்பதைத் தவிர்த்தால் அதுவே போதும். உண்மையான தியானம் ஆத்மாவை நிலைத்திருத்தல் என்பதை விட, அனாத்ம விஷயங்கள் நினைப்பதை விட்டுவிடல் என்பதே சரி என்கிறார் பகவான்.

H.C கன்னாவின் கேள்விக்கு விடை பகரும்போது ஒரு சிறப்பான எடுத்துக்காட்டை கூறுகிறார். “உங்கள் அலுவலக வேலைகளைச் செய்யும்போது அதை ஒரு கடமையாகச் செய்கிறீர்கள். அதனால் உரிமையாளர்க்கு வரும் லாப, நஷ்டக் கணக்குகள் குறித்து எண்ணுவதில்லை. அதேசமயம் உங்கள் வீட்டுக் கடமைகளைச் செய்யும்போது, இதனால் உங்கள் குடும்பத்திற்கு நன்மையா? அல்லது தீமையா என்று ஆலோசிக்கிறீர்கள். ஒருவன் ஆன்மாவில் லயித்திருந்தால் தன் கடமைகளைச் சரியாகச் செய்ய இயலாது என்பது தங்கள் கருத்து. ஒரு நாடக நடிகன் வேடம் புனைந்து நடித்தாலும் தான் உண்மையில் அந்தக் கதாபாத்திரம் அல்ல என்று தெரியும். அதுபோன்றே நீங்கள் அநித்யமான உலகம் மற்றும் லோகாயத வஸ்துக்களை நித்யமான ஆத்மா அல்ல என்று மெய்யாக உணர்ந்தபின் ஏன் உடல், உணர்வு எண்ணங்கள் இவற்றைப் பற்றி எண்ணி உங்களை கவலைக்கு உள்ளாக்கிக் கொள்ள வேண்டும்?

உடல் செய்யும் கருமங்கள் உங்களை நித்ய வஸ்துவான ஆத்மாவில் நிலைப்பதில் இருந்து வழுவச் செய்யக் கூடாது. ஒரு நடிகன் ஏற்று நடிக்கும் பாத்திரம் அவன் உண்மையான வாழ்வின் நிலைக்குத் தடையாக இருப்பதில்லை. ஹிரண்ய கசிபுவாக நடிக்கும் நடிகன்

தன் குழந்தையைக் கொல்ல முற்படுவதில்லை. அதேபோன்று திறமையாக தன் கடமைகளைச் செய்வதற்கு, அந்த ஆத்மாவில் நிலைபெற்று இருப்பது தடையாக இருக்க முடியாது."

தானே இந்த உண்மையை வாழ்ந்து காட்டினார் பகவான். "உடல் நோயைக் கண்டு அஞ்சாதே. அது உடல் மட்டிலுமானதே" என்பார். அவர் தனது மிகக் கொடிய மூட்டு வலியைக்கூட "அது பாட்டுக்கு என்னுடன் இருந்து விட்டு போகட்டுமே" என்பார். "டாக்டர் ராவ் இந்த வலிக்கு கொடுக்கும் கவனத்தினால்தான் அது என்னை விட்டுப் போக மாட்டேன் என்கிறது. ஓரிடத்தில் விருந்தோம்பல் நிறையக் கிடைத்தால் யார்தான் அதைவிட்டுச் செல்வார்கள்" என்று கூறிச் சிரிப்பார் பகவான்.

"நித்யா நித்ய விவேகமான ஞானத்தை எப்படி அடைவது?" என்று ஓர் அன்பர் வினவியபோது பகவான், "அடைவதற்கு என்று என்ன இருக்கிறது? சத் என்று எப்போதும் இருக்கும் நித்ய வஸ்து அதை எங்கோ வெளியே போய் அடைய முயலுவதால் தவறாக நாம் பொய்யில் உழன்று கொண்டு பொய்மை மெய்யாக்குகிறோம். அநித்யத்தை நித்யம் என்று எண்ணிக் கொண்டு இருக்கிறோம். நாம் செய்ய வேண்டியது எல்லாம் ஒன்று மட்டுமே. பொய்யான ஒன்றை மெய் என எண்ணும் தவறை விட்டு விடுவதே. புதிதான ஞானம் என்ற ஒன்றை உருவாக்கவோ அல்லது நம்மிடம் இல்லாத ஒன்றை சாதித்து பெறுவதோ எதுவுமில்லை. ஞானம் பெற நமக்குத் தேவையானது இதுவே. பல்லாண்டுகளாய் நம்முள்ளே சேமித்து வைத்துள்ள சம்ஸ்கார மூட்டைகளை ஒதுக்கித் தள்ளி விட வேண்டும். எப்போது அநித்யங்களை ஒதுக்கி விடுகிறோமோ அப்போது நித்யமான ஆத்மா தானே ஒளிர்கிறது" என்பது பானர்ஜிக்கு பகவான் கொடுத்த உபதேசம்.

*மேலும் பகவான் விளக்குகிறார்: "ஓர் அறையில் காலி இடம் உள்ளது அதை நாம் பலவிதமான பொருட்களால் நிரப்புகிறோம். நமக்கு இடம் தேவையானால் அப்பொருட்களை நீக்கினால் இடம் கிடைக்கிறது. அதுபோலவே நம் மனத்திலிருந்து வேண்டாத குப்பைகளை நீக்கினால் சத்யமும் சாந்தமும் புலனாகும்."*

*நித்யா நித்ய வஸ்து விவேகத்தின் வெளிப்பாடுதான் பகவானின் அச்சமின்மை. த்வித்யாத்வை பயம் பவதி இரண்டாவதாக ஒன்று இருந்தால்தான் பயம் ஏற்படும். அப்படி இரண்டாவதாக ஒன்று இல்லை எனில் பயம் ஏது? இதை முற்றிலும் உணர்ந்த பகவான் அச்சத்தை முற்றிலும் கடந்தவர். நமது அச்சத்தை கடக்கவும் இதையே வழியாக பகவான் உபதேசிக்கிறார். எனவேதான் 1896 மற்றும் 1905 ஆம் ஆண்டுகளில் உக்கிரமான ப்ளேக் நோய் திருவண்ணாமலையைத் தாக்கியபோது, ஊரே காலி செய்து போனாலும், பகவான் அஞ்சா நெஞ்சராக அருணாசலத்திலேயே வீற்றிருந்தார். தனது உடலே அநித்யம் என்று உணர்ந்து உபதேசித்த பகவானுக்கு அநித்ய வஸ்துக்களாய் எழும் பயம் எது? ராஜநாகம் மேலேறி செல்லும்போதும் அச்சம் சிறிதும் இன்றி "சில்லென்று இருக்கிறது" எனப் புன்னகையுடன் கூறினார். விருபாக்ஷ குகையின் வாயிலில் வேங்கை வந்தபோதும் உத்தர குமாரன் வாஸுதேவ சாஸ்திரி அச்சம் மீறி பகவானை வெளியில் விட்டு உள்ளே தாழ்போட்டுக் கொண்டபோதும் புலியுடன் "வாஸுதேவன் பயப்படுகிறான். நீ போய்விடு" என ஆதுரத்துடன் கூற வைத்தது. நித்யா நித்ய விவேகத்தின் கொடுமுடி பகவான். அவரைச் சரணடைந்து அச்சத்திலிருந்து விடுவோமாக*

*மீண்டும் உரையாடலைத் தொடர்வோம்.*

*பகவான் பணியில் தங்கள்*

*ராம்மோஹன்*

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### *28. ஞானம் பிரியாமை*

*குறள் 271: பிறந்திட மாலிடம் பேரா திருப்பின்*
*இறந்திடம் வன்னி யிடம்.*

*பொருள்: தந்திர யோக சாஸ்திரப்படி திருமால் வசிக்கும் இடம் மணிபூரக நாடியான உந்திக் கமலம் எனப்படும் தொப்புள் (நாபி) பிரதேசம். (கௌமாரத்தில் மணிபூரகம் குமரக் கடவுள் இருக்கும் இடமாகக் குறிப்பிடப்படுகிறது.) நாம் தீவிர யோகப் பயிற்சியின் மூலம் மணிபூரக நாடியைத் திறக்கச் செய்ய வேண்டியது அவசியம். இதைச் செய்யாமல் வாளாவிருந்தால் நம் உலக வாழ்க்கை சாதாரணமாக முடிந்துபோய் எல்லோரும்போல் வன்னி எனப்படும் அந்நிலையில் நம் பிரதம் தகனப்பட்டு அழியும்.*

*குறள் 272: சாகா திருந்த தலமே மவுனமது*
*ஏகாந்த மாக விரு.*

*பொருள்: நாபித் தானத்தில் நிலைகொண்டுள்ள மணிபூரக நாத நாபிக்கமலத்தில் நாம் கருத்தை செலுத்தி மௌனத்தில் இருக்கும்போது இறப்பு தடுக்கப்படுகிறது. சாதகன் தன் கருத்தை தீவிர தியானத்துடன் நாபிக் கமலத்தில் இணையச் செய்து சற்றும் எண்ணம் ஏதுமின்றி சலனமற்று இருக்க வேண்டும். மணிபூரகம் ஞான சாதனையில் திறக்கப்பட்டு இருந்தால், யோக சாதனை சித்திக்கும், அதன்றி, கர்ம வினைகள் செயல்படத் துவங்கும்போது பௌதிகம் உலகம் தோன்றுகிறது.*

*குறள் 273:* வெளியில் விளைந்த விளைவின் கனிதான்
ஒளியி லொளியா யுறும்.

பொருள்: மூலாதாரத்தில் உள்ள அக்னி யோகப் பயிற்சியினால் மேலெழுந்து துரிய நிலையையும் தாண்டி பரவெளியில் ஜோதியுடன் கலக்கும் நிலையே இறுதி ஞான நிலை.

*குறள் 274:* மறவா நினையா மவுனத் திருக்கில்
பிறவா ரிறவார் பிணை.

(பிணை = பின்னர்)

பொருள்: நினைப்பும் மறப்பும் இல்லா, விருப்பு வெறுப்பு என்ற மனோ நிலைகளைக் கடந்து, தன்னையே மறந்து சுத்த மௌனத்தில் தியானித்து இருப்போர்க்கு பிறப்பு இறப்புகளில் இருந்து விடுதலை பெறலாம்.

ஒப்பு:

சித்த மவுனஞ் செயல்வாக் கெலாமவுனஞ்
சுத்த மவுனம்என்பால் தோன்றிற் பராபரமே.

(பராபரக்கண்ணி, 1)

*குறள் 275:* குருவாம் பரநந்தி கூடல் குறித்தாங்
கிருபோது நீங்கா திரு. 275

பொருள்: ஞான யோக சாதனையில் மனம் குவித்து ஈடுபடும்போது பரிணாம நிலையில் உந்திக் கமலத்தில் நந்தியாகிய குருவாகிய சிவன் உதிக்கும் தருணம்வரை மௌனத்தில் இடைவிடாது நிலைத்து இரு.

*குறள் 276:* சுந்திரச் சோதி துலங்கு மிடமது
மந்திரச் சக்கரமு மாம்.

பொருள்: எழில் நிரம்பிய சோதி துவங்கும் இடம் என்பது ஸஹஸ்ரா சக்கிரம் ஒளி வீசித் திகழ்கிற தலையின் உச்சியே. அங்கு தர்ம சக்கிரத்தை கண்டு தியானிக்கும்போது தலைசிறந்த மந்திரமாகிய ப்ரணவம்

*வெளிப்படும். அந்தத் துரிய சக்கரம் விளங்குகின்ற இடம்தான் 'ஓம்' என்னும் உயர் மந்திரம் ஒளிரும் இடம்.*

*குறள் 277: தூராதி தூரஞ் சொல்லத் தொலையாது*
*பாராப் பராபரம் பார்.*

*பொருள்: மெய்யான ஞானப் பயிற்சியில் மனம் குவிந்து ஈடுபடாதவர்க்கு பரம்பொருளானது பார்க்கவும் அறியவும் முடியாத தூரத்திலும், தேடியவர்க்கு மிக அருகிலும் இருக்கிறான். இதனை சொல்லால் விளக்க முடியாது. நீயே உன் பயிற்சியில் அதை அறியலாம்.*

*குறள் 278: ஈரொளி யீதென் றிறைவ னுரைத்தனன்*
*நீரொளி மீது நிலை.*

*பொருள்: பெரும் குரு தேவனாகிய சிவபிரான் மேலும் கீழுமாய் இரு மண்டலம் ஆகிய நாதத்தையும் பிந்துவையும் குறிப்பிட்டு இதுதான் என உணர்ந்து அதன் மத்தியில் உள்ள நீர் மண்டலம் உந்திக் கமலத்திருந்து ஒளி வெளிப்படும்போது சுத்த மௌனம் சித்திக்கும் என்று உபதேசிக்கிறார்.*

*குறள் 279: அந்தமு மாதியு மில்லா வரும்பொருள்*
*சுந்தர ஞானச் சுடர்.*

*பொருள்: முதலும் முடிவும் அற்ற அருமைப் பொருளைக் கருத்தில் உதிக்கும் அந்த நிலையே ஞானச் சுடராம்.*

*குறள் 280: இதுமுத்தி சாதனமென் றேட்டில் வரைந்து*
*பதிவைத் தனன்குரு பார்.*

*பொருள்: இதுதான் முக்திக்கு வழி என ஏட்டில் எழுதி பதியாகிய குரு நமது இதயக் குகையில் வைத்துள்ளான்.*

*(தொடரும்)*



# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மௌனிசாது
## மொழிமாற்றம்: ராம் மோஹன்

### 36. கோரிக்கை

பகவான் சந்நிதியில் மாலை வேளைகளில் செய்யப்படும் தியானப் பயிற்சிகளின் தொடர்ச்சியாக வாரத்தில் ஒருநாள் தனியாகத் தியானிப்பதை வழக்கமான இறை அர்ப்பணமாகத் செய்து கொண்டு இருந்தேன். அப்பொழுது என் இதயத்தில் எழும் அலைகளை எழுதி வைத்ததில்லை. ஏனெனில் அவை அனைத்தும் ஒன்று போலவே இருந்தன. அவற்றை எழுத்தில் அடக்கவும் இயலாது நாம ரூபங்களைக் கடந்த ஓர் உன்னத நிலைக்கு எனது ப்ரக்ஞை உணர்வில் என்னை உயர்த்தச் செய்யப்படும் முயற்சிகளாகவே இவற்றை நான் கருதினேன். ஆரம்ப நிலையில், என்னுடைய எண்ணச் சுழல்நிலையைக் கடந்து வெளிச் செல்ல செய்யப்படும் முயற்சிகளுடன், அம் முயற்சிகளை ஒடுக்கும் தடைகளுடன் செய்யப்படும் பேராட்டங்களே நிகழ்ந்தன. இவை முடிந்தபின் ஒரு வெள்ளித் திரையில் காட்சிகள் ஓடுவது போன்று எனது கடந்த கால நிகழ்வுகள் ஓடுகின்றன. இறுதியில் வழக்கமான விடியல் வேளையில் ஒரு பெரும் சாந்தி உணர்வு என் மனதில் பிரகாசிக்கின்றது.

என்னால் மறக்க இயலாத ஒரு ஜுலை இரவு அதுதான் இந்தக் கட்டுரையின் தலைப்பாக அமைந்துள்ளது. அன்று என்னுடைய பௌதிக வாழ்வு என்றென்றுமாய் புதைக்கப்பட்டது. வழக்கமாக என்னுடைய என்ன

ஓட்டங்களையும், கவனத்தையும் மற்றும் பின்நோக்கிய பார்வையையும் கவ்வி நிற்கும். என் வாழ்வியல் முற்றிலுமாய் அதற்கு எப்போதும் அடிப்படையாய் உள்ள பொய்ம்மை சாகரத்தால் விழுங்கப்பட்டு மறைந்தது.

'இருப்பு' என்னும் உள்ள பொருள் ஒன்றே மெய்யானது என்பதையும் திரும்ப திரும்ப வரும் பழைய நினைவுகள் ஒரு தற்காலிக தற்கொலைக்கு ஒப்பாகும் என்பதை இதுகாறும் நான் அறிந்து இருக்கவில்லை.

முதலாக ஹீப்ரு மொழி நூலான 'கப்பாலா' என்பதைச் சார்ந்து எழுதப்பட்ட நூலின் ஒரு பத்தியை நான் நினைவுக்கு கொண்டு வந்தேன். அது அப்போது எனக்கு ஒரு விளங்காப் புதிராக இருந்தது. இப்பொழுதும் அதன் ஆழ்பொருளை என்னால் விளங்கிக் கொள்ள இயலவில்லை.

அந்த சாதகன் தன்னுடைய இதய ஆலயத்துள் பிரவேசித்தான். அங்கே ஒரு பலிபீடம் இருந்தது. அங்கு இரண்டு தீபங்கள் சுடர் விட்டு ஒளிர்ந்து கொண்டு இருந்தன.

இவை தனது சொந்த வாழ்க்கையின் தீபங்கள் என்பதை அவன் உணர்ந்தான். அவை தானே அவனுக்கு அருகில் உள்ள தீபம் பல நிறங்களில் ஒளிர்ந்தது. ஆழ்ந்த நிறங்களுடன் அது அதிர்ந்தது, ஒரு சிறிய அளவிலான புகையையும் வெளியிட்டது. அந்த அதிர்வுகள் தனது என்ன உணர்வு அலைகளை ஒத்திருப்பதைக் கண்டு அவன் அது தன்னுடைய ஆழ்மனத்தின் எண்ணங்களையும் பிரதிபலிக்கிறது என்பதை அவன் உணர்ந்தான்.

தொலைவில் இருந்த இரண்டாவது விளக்கின் ஒளி நிறமற்று இருந்தது. ஆயினும் அதனுடைய கதிர்கள் எங்கும் வியாபித்து, முதல் விளக்கு தரும் மாறும்

நிறமாலையைத் துளைத்துக் கொண்டு ஒளிர்கிறது. ஆதிநாள் தொடங்கி அசையாமல் ஒளிரும் அந்த தீபம் அமைதியாய் சுடர்விட்டுக் கொண்டு உள்ளது. முடிவற்ற ஒன்று தரும் பரம சாந்தியுடன் அது ஒளிர்ந்து கொண்டு உள்ளது.

பின்னர் வெள்ளை நிற உடையணிந்த ஒரு யூத போதகர் (ரபி) அங்கே வந்து, அந்த இரண்டு விளக்குகளையும் தன் கைகளில் எடுத்துக்கொண்டு அவற்றின் இடங்களை மாற்றினார். 'இந்த தருணத்திலிருந்து, நித்தியத்தைப் புரிந்துகொள்வதைக் கடினமாக்கிய நிலையற்ற ஒளியின் வழியாகப் பார்ப்பதற்குப் பதிலாக, நித்தியத்தின் ஒளியின் வழியாக நிலையற்ற வாழ்க்கையின் வழியாகப் பார்ப்பீர்கள்' என்றார்.

*** *** ***

'நான் யார்? நான் யார்? நான் யார்?' வழக்கம் போல் இந்த தியான விசாரணையில் ஆழ்ந்தேன். திடீரென்று என் முழு வாழ்க்கையும், அதன் ஆரம்பத்திலிருந்தே, இந்நாள்வரை என் நினைவின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஒடுங்கி இருந்த விஷயங்கள் ஒரு திரைப்படம் போல் என் முன்னர் விரிவதைக் கண்டேன்.

அதைப் பார்த்தவுடன், நான் முன் கண்ட அதே அனுபவங்களை சுருக்கமாகவும் மிக விரைவாகவும் கடந்து சென்றேன். இந்த மாயையான நிலையற்ற விஷயங்களை என் ப்ரக்ஞையில் நிலைபெற அனுமதிப்பது தவறானது என்று உணர்ந்தேன். ஆனால் அதேசமயம் என்னால் மறுதலிக்க இயலாத ஒரு குரல் அந்தப் பட ஓட்டத்தைப் பார்க்குமாறு கட்டளை இட்டது.

என் கண்முன்னால் என்னுடைய இளம் வயது நிகழ்வுகளை அவற்றின் முட்டாள்தனம் வேகமான செயல்கள், உள்ளுணர்வால் உந்தப்பட்ட

நடவடிக்கைகள் எனது சுயநலம், சூழ்நிலையும் என்னை செயல்படுத்த செய்ய வைத்த மக்கள் அன்பும், வெறுப்பும், உயர்ந்த மற்றும் தாழ்ந்த உந்துதல்கள், என்னால் அறிய முடியாத ஒன்றிணைந்த தேடுதல், என் கைக் கெட்டிய தூரத்தில் விரிந்து விரைந்து சென்றன.

எனக்கு மிகவும் பரிட்சையமான பௌதிக உருவம் காலம் கழியக் கழிய சுருக்கம் அடைந்து, அதன் அனைத்து நம்பிக்கைகள் மற்றும் கனவுகள் மற்றும் முயற்சிகள் அனைத்தும் முடிந்து போய், ஒன்றுமில்லா நிலையில் அழிவதைக் காண முடிந்தது.

இரண்டு உலக யுத்தங்கள், இடையில் எழுந்த அமைதி நிலவிய ஆண்டுகள், மறைபொருள் ஆய்வில் எனது முயற்சிகள் அதில் உயர்ந்த வெற்றி கிடைக்கும் என்ற எனது நம்பிக்கைகள் அண்டவியல் ஆய்வுகள், புதிய கருததுகள் எழுவதால் அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் அனைத்தும் என் முன்னால் வேகமாய் ஓடிச் சென்றன.

என் ப்ரக்ஞையில் ஒரு அடர்ந்த கரிய மேகம் இறங்கியது போல் உணர்ந்தேன். நான் உள்ளுணர்வின் மூலம் ஒரு விடையைத் தேடிக் கொண்டு இருந்தேன். அது நிச்சயம் கிடைக்கப் பெறும் என்ற நம்பிக்கையுடன் இருந்தேன். மீண்டும் என் எண்ணங்கள் தோற்றுவிக்கும் பேயுலகினை காண வேண்டி இருக்காது.

ஒரு சக்தி வாய்ந்த முயற்சியில் என் வலிமை அனைத்தையும் ஒன்று திரட்டி, இந்த விசித்திரமான எண்ணச் சங்கிலியை முடிவுக்குக் கொண்டு வந்தேன். அந்த நொடியில் இந்த மனப்படக் காட்சி சட்டென நின்றது. உயிரிழந்தது. அந்தக் கணத்தில் நான் ஐயம் எல்லாம் நீங்கி உணர்ந்தேன் ‘இது எல்லாம் நான் அல்ல’ இங்கு நடிக்கும் கதாபாத்திரம். அவனைச் சூழ்ந்து இருக்கும் ஜோடிப்புகள், அலங்காரங்கள் எப்பொழுதும் ‘நான்’ ஆக இருந்ததில்லை. இந்த மேலோட்ட

அநுபவங்கள், முட்டாள்தனமான முயற்சிகள் நோக்கமற்ற உணர்ச்சிகள், சற்று நேரத்திற்கு முன் இதுதான் நான் என எண்ணவைத்தவை அனைத்துமே நானல்ல. பிறரைப் பற்றிய விமர்சனங்களை முன்பு நான் வெறுத்து ஒதுக்கி இருப்பேன். இப்போது நான் என்னை நானே விமர்சித்துக் கொள்ளவும், பிறர் விமர்சிக்க இடம் கொடுக்கவும் முடிகிறது. ஏன் இந்த மாற்றம்? இது எனது மனதால் உருவாக்கப்பட்டதல்ல. இந்தப் பேரமைதி கனபரிமாணமற்ற, ஒளி கசிந்து வரும் ஆத்மாவில் என்னைக் கரைத்துக் கொள்வதன் மூலம் இது கிடைக்கின்றது. ஹீப்ரு மொழிக் கதையில் கூறியதை முதல் தீபத்தை இரண்டாம் இடத்திற்கு நகர்த்தியதன் மூலம் இந்த அநுபவம் கிடைக்கப் பெற்றேன்.

இதற்கெல்லாம் காரணம் கண்டுபிடிக்க நான் முன்பு முயன்றதெல்லாம் அர்த்தமற்றவை என நான் அறிகிறேன். இந்த விவரிப்புகளிலும், பொருள் வரையறைகளிலும் எனக்கிருந்த ஆர்வம் முற்றிலும் அகன்றது. வாழ்க்கையைப் பற்றி நான் கொண்டிருந்த இக்கால கொள்கைகளில் இருந்து, எனது ஆன்மிக அநுபவம் முற்றிலும் தற்கால கொள்கைகள் அனைத்திற்கும் மறுதலிப்பாய் அமைந்துள்ளது.

**யார் தன் வாழ்வைக் காக்க முயல்கிறானோ, அவன் அதை இழக்கிறான்.**

**யார் தன் உயிரை இழக்கிறானோ, அதை அவன் பத்திரமாக பாதுகாக்கிறான்**

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு கூறப்பட்டு இருந்தாலும் ஆரம்பத்தில் அறிந்து கொள்ள இயலாத ஆழ்பொருளைக் கொண்டதாய் இருந்தாலும் அவற்றை இப்போது ஒளிவீசும் உண்மையாக நான் உணர்கிறேன். சத்குருவின் வாக்குகள் நம் நெஞ்சத்தில் கல்வெட்டு போலப் பதிந்துள்ளன. சுவர்கமும் பூமியும் அழிந்துகடலாம் ஆனால் நான் சொல்லும் பேருண்மைகள் என்றும் அழியாதவை.

எனது தியானத்தில் உற்சாகமாய் பங்கேற்ற மனதில் செயல்பாட்டிற்குப் பின் மெதுவாக புறஉலகம் திரும்பும்போது ஆச்ரம சற்றுச் சுவர் தாண்டி விலங்குகள் இரவில் வரும் சப்தம் கேட்கத் தொடங்கினேன். நான் என் கண்களைத் திறந்து சாளரம் வழியே நோக்கினேன். இரும்புக் கம்பிகளால் வலையிடப்பட்ட அந்தச் சாளரத்தின் வழியே ஒரு ரோமம் நிறைந்த பெரிய தலை தெரிந்தது. விடியல் வேளையினால் தனது தூக்கத்தினின்றும் எழுப்பப்பட்ட குரங்கு ஒன்று மாம்பழத்தை நாடி இங்கு வந்துள்ளது.

*** *** ***

ஒரு மஹா ஞானி தனது தவ வாழ்க்கைக்காக தேர்ந்து எடுக்கப்பட்ட அருணாசலத்தின் அடிவாரத்தில் அமைந்துள்ள ஆச்ரமத்தில், அந்த அற்புதமான அமைதி தவழும் சூழ்நிலையில், ஒரு புதிய நாள் துவங்குகிறது. இங்கே இயற்கையாகவே வந்து மனிதர்தம் உழைப்பிற்கு உதவி செய்கிறது என்பது உண்மையே. ஏனெனில் வெப்ப மண்டலத்தில் அமைந்திருந்தாலும் உழைக்கும் மனிதரை அதிகம் துன்புறுத்தி சோர்வடையச் செய்வதில்லை. இத்தகு இயற்கையின் உதவிக்கரம் இந்த வறண்ட சீதோஷ்ண நிலையாய் உருவானதா, அன்றி மிகப் பிரபலமாக அறியப்படும் அருணாசலத்தின் காந்த சக்தியால் இது நிகழ்கிறதா? நான் அறியேன். ஒன்று மட்டும் சொல்வேன். எனது ஆன்மிக அநுபவத்தில் இருந்து, ஒருவரது ஆன்மிக சாதனைக்கு துணை செய்யும் சக்தி எங்கும் பரவி இருப்பதை வேறு எந்த இடத்திலேயும் கண்டதில்லை.

இந்த ஒப்பற்ற சக்தியில் இருந்து நான் மேலும் மேலும் பல ஆத்மிகப் பயன் பெறும் நாள் ஒரு முடிவுக்கு வருவது விரைவிலேயே வரும் என்பதை என் உள்ளுணர்வு எனக்குக் கூறுகிறது. எனவே நான் இந்த ஆன்மிக பூமியில் எவ்வளவு ஆழமாக வேரூன்ற

*முடியுமோ அவ்வளவு ஆழம் வேரூன்றி, நான் பின்னர் செல்லப் போகும் அத்துணை இடங்கட்கும் இதைக் கொண்டு செல்ல முயற்சிக்கிறேன்.*

*மாலைவேளை தெய்வீக தியானப் பாடல்கள் என் செவியில் விழுகிறது. அவை எனது தற்போதைய ஆன்மிக அநுபவத்துடன் தொடர்பு கொள்கின்றன. இதைவிட்டு நான் நீங்கிய பின்னர், நான் ஒரு புதிய பௌதிக உலகில் பின்னர் நிலை கொள்ளும்போது இவை எனக்கு உதவி செய்யும். நான் ஆஸ்ரமத்தில் வாழுகின்ற அதேமாதிரியான வாழ்வை அங்கும் வாழ முயல்வேன். மஹரிஷியின் திருவடிகளில் வாழ்வது போலவே வாழ்வேன். எனது உள்ளுணர்வு மேற்கத்திய உலகின் ஓசை நிறைந்த வாழ்வீல் நான் பங்கேற்கும்போது இது எனக்கு உதவி செய்யும் என்று கூறுகிறது. எனக்கு மௌன சாம்ராஜ்யத்தில் மீண்டும் கால்பதிக்க இந்த அனுபவம் உதவி செய்யும்.*

*இப்பொழுது எனக்கு இருக்கும் ஆன்மிக வாழ்வின் வசதிகள் அனைத்தையும் பயன்படுத்திக் கொள்வது சிறப்பல்லவா! மகரிஷியின் பெயர் மட்டிலுமே இங்கே பேரமைதியை என்னுள் கொணர்கின்றதே! அவரது தீக்ஷண்யமான பார்வையை என்னால் மறக்க இயலுமா?*

*இப்போது இந்த உக்ரமான உஷ்ண வேளையில் இந்த வார்த்தைகளை எழுதிக் கொண்டிருக்கும்போது என்னைச் சுற்றி அனைத்தும் சற்றும் அசையாமல் நிற்கும்போது மகரிஷியினைப் பற்றிய ஒரு சொல் மட்டுமே அவரது அருட் பிரகாசத்தை என்முன்னே கொணர்கிறது. மனம் முற்றிலும் நிற்கிறது.*

*இத்துடன் நான் எழுதுவது நிற்கிறது.*



# பகவானின் அணுக்கத் தொண்டர் டி. ஆர். கனகம்மாளின் அருந்தவ வாழ்வு

## பகுதி ஒன்று

### தமிழில்: மா. முருகேசன்

*“நான் பன்னிரண்டு வயது அடைந்தபொழுது, என் திருமணத்திற்கு திட்டமிடத் தொடங்கினர். எனக்கு திருமணம் வேண்டாமென என் தந்தையிடம் கூறி அவரை ஒத்துக்கொள்ளச் செய்ய முயற்சித்தேன். அவரிடம் எனக்கு திருமணம் வேண்டாமென கெஞ்சி மன்றாடினேன்; ஆனால், என் முயற்சிகள் தோல்வியில்தான் முடிந்தன. என் வலிமையான எதிர்பார்ப்புகளுக்கிடையே, குடும்பத்தில் இருந்த மூத்தோர் என் தந்தையை எனது கல்யாணத்தை உடனடியாகத் தீர்மானிக்குமாறு வற்புறுத்தினர். என் தந்தையிடம் நான் சென்று எனக்குத் திருமணம் வேண்டாம் என்ற எண்ணத்தையும் உணர்வையும் வெளிப்படையாகக் கூறினேன். தொடர்ச்சியாக எனக்கு திருமணம் வேண்டாம் என மறுப்பு தெரிவித்தபொழுதும் என் திருமணத்தை நீங்கள் உறுதிப்படுத்தி விட்டீர்கள். நான் இளம் வயதுடையவளானாலும் என் முடிவில் நான் உறுதிப்பாட்டுடன் இருக்கின்றேன். திருமணமான பெண்ணாக நான் வாழ முடியாது என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை. என் எதிர்பார்ப்புகளை பொருட்படுத்தாமல் நீங்கள் திட்டமிட்டவாறு*

*திருமண ஏற்பாடுகளை செய்தால் உங்கள் தவறுக்காக வருத்தப்படுவீர்கள். இந்த ஏற்பாட்டிற்காக நீங்கள் ஒரு இக்கட்டான சூழலில் அகப்படும்பொழுது அதற்காக நீங்கள் என்னை குறை கூறக்கூடாது."*

கனகம்மாள் தொடர்ந்து கூறினார்.

*"அதைப் பற்றி இப்பொழுது நான் நினைத்துப் பார்க்கும்பொழுது என் வலிமையைக் கண்டு நான் ஆச்சரியத்தில் திகைத்துப் போகின்றேன். அதற்கு முன்னால் இதுபோன்று என் தந்தையிடம் நான் பேசியதில்லை. என் அறிவிற்கு அப்பாற்பட்ட ஏதோவொரு சக்தி என்னை ஊக்குவித்து வலிமைப் பெறச் செய்து, பனிரெண்டு வயதில் என் தந்தையிடம் அவ்வளவு உறுதியாகப் பேச வைத்துள்ளது."*

ஆனால் அவர் கூறியவற்றால் அவரது தந்தை எரிச்சல்பட்டாலும் கனிவுடன் இவ்வாறு பதிலுரைத்தார்.

*"கனகா, உன் திருமணத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. எனவே, எங்களோடு ஒத்துழைக்க வேண்டும். பிறகு, இதே மனநிலையில் நீ உறுதியாக இருந்தால் நான் உன் விருப்பப்படி நடக்க உடன்படுவேன். உன் விருப்பத்திற்கு எதிராக எதையும் உன்னிடம் வற்புறுத்தமாட்டேன். ஆனால், இந்த நிலையில் தயை கூர்ந்து திருமணத்தை நிறுத்திவிடவேண்டாம்."*

முறிந்துபோன திருமணத்தினால் ஏற்பட்ட பதற்றம் சில மாதங்களில் குறைந்துபோனாலும் திருமண வாழ்வு விவாதப் பொருளாகவே இருந்தது. எவ்வாறு எப்படி கனகாவின் வாழ்வு நடந்தேறும் என அவரது குடும்பத்தினர் கவலை கொண்டனர். கனகம்மாளைப் பொறுத்தவரையில், ஸ்ரீ பகவானை வணங்கி தனது தியான வாழ்வைத் தொடர்வதற்காக பகவான் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் இடமருகே வந்து தங்கியிருந்து ஆன்மீக வாழ்வைத்

தொடர வேண்டுமென்பது மட்டுமே விருப்பமாய் எப்பொழுதும் இருந்தது. திருவண்ணாமலையில் இளம் வயதில் தன்னந்தனியாய் தங்கள் மகள் தங்கியிருக்க வேண்டுமே என வருத்தமுற்றனர். இதற்கிடையில், தவவாழ்வின் மீது கனகம்மாள் கொண்டிருந்த வேட்கை அதிதீவிரமானது.

*“ரமணாஸ்ரமம் சென்று பகவானைத் தரிசிக்கின்ற ஒவ்வொரு முறையும் என் நெஞ்சம் நெக்குருகி நெகிழ்ந்து கண்கள் தாரை தாரையாய் உதிர்த்து கன்னத்தில் திவலைகள் உருண்டோடின. ரமணாஸ்ரமத்திலேயே தங்கிவிட வேண்டும் என்ற வேட்கை கட்டுக்கடங்காமல் போனது.*

*1944ல் நான் ஆஸ்ரமத்துக்குச் சென்றேன். தியான மண்டபத்தினுள் நுழைந்தேன். பகவான் தரிசனத்தில் பக்தர்கள் தியானத்தில் மூழ்கியிருப்பதைப் பார்த்தவுடன் என் நெஞ்சம் அமைதியாய் அழுதது, பகவான், இந்த நல்அதிர்ஷ்ட அணுக்கத் தொண்டர்களைப் போல, நானும் உங்கள் சந்நிதி தரிசனத்தில் திளைத்திருக்கவே வேணவா கொண்டுள்ளேன். என் விண்ணப்பம் என்றேனும் ஏற்றுக்கொள்ளப்படுமா? அங்கும் இங்கும் பயணித்து எவ்வளவு காலத்தை நான் வீணடிக்க நேரிடும்? இந்த எண்ணத்தால் என் கண்கள் பனித்தன.*

*நீர் நிறைந்த கண்களோடு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்தேன். அருவியாய்ப் பாயும் அருட்கடலின் பார்வை நீண்ட நேரம் என் மீது நிலைத்திருந்தது; என் நெஞ்சமும் நெக்குருகி நெகிழ்ந்தது. ஆனால், வார்த்தைகளால் என் வேதனையை எடுத்தியம்ப இயலவில்லை. அவரது தரிசனத்தில் சொல்லிழந்து மெய்மறந்து நின்று விடுகின்றேன். எவ்வாறாயினும், பகவானிடம் எப்பொழுதும் என்னால் வெளிப் படையாய்ப் பேச இயலவில்லை. உள்ளத்தில் ஆழ்ந்து கிடக்கும் என் வேணாவாவையும் இயம்ப இயலவில்லை.” (மேலது. பக்.56)*

தன் இல்லத்தில் வசித்து வந்தாலும், தன் உள்ளத்திலுள்ள குழப்பங்களை பகவானிடம் கூறிவிட வேண்டுமென முடிவெடுத்து, கனகம்மாள் தொடர்ந்து தன் வழக்கமான ஆஸ்ரம பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

*"அடியார்கள் தங்கள் ஐயப்பாடுகளையும் மனக் கவலைகளையும் பகவானிடம் கூறுவதையும், பகவான் அவர்களுடைய சந்தேகங்களை தெளிவு படுத்துவதையும் நான் பலமுறை கண்டிருக்கின்றேன். நானும் பகவானிடம் சிலவற்றைக் கேட்க வேண்டும் என சில சமயம் எண்ணுவதுண்டு. ஆனால், உடனடியாக என் உள் மனக்குரல் சொல்லும், உன் இதயத்தில் உள்ளதை பகவானிடம் சொல்லுவது உண்மையில் அவசியமா? உன் எண்ணங்களை அவரால் அறிந்துகொள்ள முடியாதா? இந்த எண்ணம் தோன்றியவுடன், கேள்வி கேட்க வேண்டுமென்கின்ற ஆர்வம் மனதிலிருந்து மறைந்துவிடும். இந்த ஆர்வம் மறைந்தவுடனேயே என் மனம் லேசாகி தெளிவாகிவிடும். அலாதியான அமைதி என்னை ஆட்கொள்வதை நான் உணர்ந்திருக்கின்றேன். பேச வேண்டும், செயல்பட வேண்டும் என்கின்ற ஆசைகள் மறைந்து, என் மனம் முழு அமைதியோடும் மன நிறைவோடும் பகவானின் பாதாரவிந்தங்களில் பணிந்து அர்ப்பணித்துக் கிடப்பதைக் கண்டிருக்கின்றேன். இந்த அற்புதமான நிகழ்வினை என்னால் விவரிக்க இயலாது. நான் ஏதேனும் கேட்டால் அதற்கு பகவான் பதில் அருளமாட்டாரோ என்கின்ற பயம் என்னிடம் கிஞ்சித்தும் இல்லை. தனி ஒருவரின் பண்பு நலன் கருதாது அடியார்கள் எல்லோரிடமும் எப்பொழுதும் கருணை மழை பொழிபவராகவே பகவான் இருக்கின்றார். என் மனநிலையை என்னால் விவரிக்க இயலவில்லை. எவ்வாறாயினும், என் உணர்வுகள் என்னை இடர்படுத்தவில்லை. குறிப்பாக, அது முக்கியமானதாக எனக்குத் தென்படவில்லை. எது நிகழ்கின்றதோ அதை அப்படியே ஏற்றுக்கொண்டேன்; அதற்கு எவ்வித விளக்கமும் தேட நான் முற்படவில்லை. இந்நிலையில்,*

*இந்த பதட்டமானது என் பெற்றோர்களை மிகவும் பாதித்தது; அவர்கள் என் மீது கொண்டிருந்த அக்கறை, நான் ரமணாஸ்ரமத்தில் நிரந்தரமாய் தங்குவது பற்றி அவர்கள் முடிவெடுப்பதை மிகவும் கடினமாக்கியது. அம்முடிவை அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய எனக்கு சில காலம் பிடித்தது." (மேலது, 56)*

வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு தனித்துவமான இச்சூழல் மிகச் சாதாரணமாகத் தோன்றலாம். அவருடைய பெற்றோர்கள் இச்சூழலாகிய சுழலில் சிக்குண்டவர்கள்; தங்கள் மகளின் எதிர்காலம் குறித்து அவர்கள் அச்சமுற்றனர். ஆழ்ந்த நம்பிக்கையும் பக்தியும் திடீரென்று குடும்ப உறவு எனும் உணர்வால், திருமணக் காலம் கடந்து, உந்தப்படுமானால் என்னவாகும் எனத் திகைத்தனர். வாழ்க்கையைப் பற்றிய பார்வையில் அவருடைய இதயத்தில் அதிரடி மாற்றம் நிகழ்ந்தால் என்னவாகும்?

அவர்களுடைய அச்சம் அடிப்படையற்றது என உறுதியானது; கனகம்மாள் அவர் எடுத்த உறுதிப்பாட்டிலிருந்து இம்மியும் விலகவில்லை. உண்மையில், அவர் பல தொடர் எதிர்பாராத அற்புத ஆன்மீக அனுபவங்களை அனுபவமானவர். அவை அவர் செல்லும் ஆன்மீகப் பாதையைத் தெள்ளத் தெளிவாக்கியது. இத்தகைய தொடர் ஆன்மீக அனுபவங்கள்,அவரது பெற்றோர்களுக்கு இருந்த ஐயப்பாடாகிய மகளின் வாழ்வு தெய்வீக வாழ்வுதானா? என்பதை தெளிவாக்கி அவரது வாழ்வு தெய்வீக வாழ்வுதான் என தெளிவு பெற்றனர். இப்பொழுது, அவர்கள் தெய்வீக அழைப்பிற்கு ஆட்பட்டு ஏற்றுக்கொண்டனர்.

*"நான் திருவண்ணாமலைக்கு இறுதியாக வந்து சேர்வதற்கு சில நாட்களுக்கு முன்னால் எனக்கு ஒரு அற்புதமான விநோத அனுபவம் நிகழ்ந்தது. அது ஒரு அதிகாலை நேரம். அப்பொழுது நான் தூங்கிக் கொண்டு தான் இருந்தேன்.*

*அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து, அதிகாலையில் சில மணி நேரங்கள் தியானத்தில் ஈடுபடுவது என் பழக்கம். அந்த குறிப்பிட்ட நாள் அதிகாலை நேரத்தில் நான் படுக்கையினின்று எழுந்திருக்கவில்லை; அப்பொழுது பகவான் அங்கிருப்பதை உணர்ந்தேன்; என் அருகில் அமர்ந்து, என் கழுத்து முதல் இதயம் வரை வருடி விடுவதை உணர்ந்தேன். புன்முறுவல் பூத்து அவர் என்னிடம் இயம்பினார், நீ எனக்கு என்ன அளித்திருக்கின்றாய்? நான் உன்னை ஏன் அவ்வளவு நேசிக்கின்றேன்? அவர் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, கழுத்து முதல் இதயம் வரை தொடர்ந்து அளவிலாது மென்மையாய் தட்டிக்கொடுப்பதை உணர்ந்தேன். இந்த அனுபவம் எவ்வளவு நேரம் நீடித்தது எனக் கூற என்னால் இயலாது. அது கனவல்ல என்பதில் நான் உறுதியாய் இருக்கின்றேன். பகவான் என் அருகில் இருப்பதை என் எல்லா உணர்வுகளும் உணர்ந்தே இருந்தன. அவருடைய சொற்களாலும், தொடுதலாலும், எனது அமைதியற்ற மனதிற்கு பகவான் அமைதியையும் நிறைவையும் கொணர்ந்தார். எவ்வளவு நேரம் அவ்வாறு படுத்திருந்தேன் என்பது எனக்குத் தெரியாது. எனது வழக்கமான நேரத்தில் நான் எழுந்திருக்காததைக் கண்ட எனது அண்ணியார் என்னை விழித்தெழச் செய்தார். எழுந்துவிட்ட பிறகும் கூட வழக்கத்திற்கு மாறான உணர்வுகள் என் இதயத்தின் அடித்தளத்தில் தொடர்ந்து மிளிர்வதை உணரமுடிந்தது. என் புலன்கள் அனைத்தையும் ஆழ்ந்த அமைதி ஆட்கொண்டிருந்தது. நான் எனது வழக்கமான செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் நான் திகைப்புற்ற நிலையிலேயே இருந்தேன். என்னிடம் நிகழ்ந்திருந்த மாற்றத்தினை என் பெற்றோர்கள் கண்டனர். குடும்ப வாழ்க்கை எனக்கானது அல்ல என்பதை அவர்கள் தெளிவாக உறுதிப்படுத்திக் கொண்டனர். என் வழியில் நான் செல்வதை ஏற்றுக் கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லை. எனவே, எனது பெற்றோர்களின் அனுமதியுடன் திருவண்ணாமலையில் நிரந்தரமாய் தங்குவதற்காக 1946 ல் வந்தடைந்தேன்.” (மேலது. பக்.57)*

தங்களுடைய மகனோ மகளோ துறவற வாழ்வை மேற்கொள்வதற்கு அவர்களுடைய குடும்பத்திலிருந்தே எதிர்ப்பு கிளம்புவது என்பது ஒவ்வொரு புனிதர்களின் வாழ்விலும் நிகழ்கின்ற ஒரு அங்கம்தான். பகவானின் அருள் வாழ்விலும் அண்ணாமலையார் தன் தனயனுக்கு கொடுத்த ஆழ்ந்த ஆன்மீக அழைப்பானது, பகவானின் அன்னை, சித்தப்பா, அண்ணன் ஆகியோரின் மறுப்பையும் எதிர்ப்பையும் எதிர்கொள்ள நேர்ந்தது. திருமண வாழ்வை மேற்கொள்ளாமல் பகவானும் கனகம்மாளும் தவிர்க்க இயலாமல் சமுதாய கட்டுப்பாடுகளைப் புறந்தள்ளினர்; ஆனால், அதே நேரத்தில் தங்கள் குடும்பத்திற்கு சிறுமை கொணராமல் பெருமையையும் மாண்பையுமே சேர்த்தனர். தொடக்கத்தில் குடும்பத்தினர் சிலர் கனகம்மாவை அந்நியராகக் கருதினரெனினும் அவரின் ஆன்மீகமும் பக்தியும் எல்லோருடைய அவருடைய குடும்பத்தில் பிரபலமாக இருந்தவர்கள் உட்பட உள்ளத்தையும் வென்றெடுத்தது.

*“திருவண்ணாமலைக்கு வந்த பின்னால், காஞ்சி பரமாச்சார்யாரை நான் பலமுறை தரிசிக்க சென்றிருந்தேன்; தரிசித்தேன்; ஆனால் நான் தேர்ந்தெடுத்துள்ள வாழ்க்கை முறையைப் பற்றி நேரிடையாகவோ மறைமுகமாகவோ, அவர் ஒரு சிறு விமர்சனம் கூட செய்யவில்லை. மாறாக, நான் தரிசனத்திற்குச் செல்கின்ற ஒவ்வொரு முறையும், என்னைப் பற்றி அன்பாக வினவி வதனத்தில் கருணைமிகு புன்முறுவலுடன் ஆசீர்வாதம் அருளினார். அதையே அவருடைய மௌன ஒப்புதலாக ஏற்றுக்கொண்டேன். ஒருமுறை, என் வயதான பாட்டியோடு காஞ்சி பரமாச்சார்யாரை தரிசிக்க சென்றிருந்தேன். நான் காஞ்சியில் தங்கி பரமாச்சார்யாரை பலமுறை தரிசிக்க வேண்டும்; அவரோடு காஞ்சியில் நான் தங்கிவிட வேண்டும் என அவர் உள்ளாழ்ந்து விரும்பினார். எவ்வாறாயினும், அதற்கு நான் ஒப்புக்*

*கொள்ளவில்லை. இதைப்பற்றி, என் பாட்டி மிக்க துயரத்துடன் பரமாச்சார்யாவிடம் பேசினார்; என்னை காஞ்சியிலேயே தங்கிவிடும்படி அருளுமாறு வேண்டிக் கொண்டார். மகாத்மாவின் பதிலைக் கேட்டு நான் குதூகளித்தேன்;கருணைமிகு பார்வையை என் மீது படரவிட்டு என் பாட்டியிடம் பரமாச்சார்யார் அருளினார், "அவள் அங்கிருந்தாலும் இங்கிருந்தாலும் அது என்ன வேறுபாட்டினை கொண்டு வரப்போகின்றது?*

*வாழ்வில் இதைவிட வேறென்ன எனக்கு வேண்டும், நான் தேர்ந்தெடுத்துள்ள வாழ்க்கை நெறிக்கு பரமாச்சாரியார் வழங்கிய அருளாசியை உளமாற கேட்டு, கண்களை பொங்கி வரும் கண்ணீர் மறைக்க உள்ளார்ந்த நன்றி பெருக்குடன் ஆச்சாரியாரை பார்த்துக்கொண்டே பரவசத்துடன் நின்றேன்." ('This and That', The Mountain Path, Jayanthi, p.141)*

## புதிய வாழ்வில் நிலைநிற்றல்

பெற்றோரின் அருளாசியுடன், திருவண்ணாமலையில் நிரந்தரமாய் தங்குவதற்காக, தன் 24 வது வயதில் வந்து சேர்ந்தார். அக்காலத்தில், ரமணா நகரில் அதிக வீடுகள் இல்லை; அதனால், ஆஸ்ரமம் அருகில் அவர் தங்குவதற்கு உடனடியாக வீடு கிடைக்கவில்லை. ஆனால், அவருடைய பெரியப்பா ராமகிருஷ்ணாவும், பெரியம்மா பொன்னம்மாளும் அவரை வருமாறு அழைத்தனர். எவ்வாறாயினும், அவர்கள் நகரின் எதிர் திசையில் வசித்து வந்ததால், அங்கிருந்து விடியற்காலைக்கு முன் தன்னந்தனியாய் ஒரு சிறு வயது பெண்மணி நகரின் வீதிளில் நடந்து ஆஸ்ரமம் வருவது பாதுகாப்பு அற்றது என்ற பிரச்சினை எழுந்தது; மேலும், அப்படி வருவதற்கு உறவினர்களை பாதுகாப்புக்கு அழைப்பது அவர்களையும் தொந்தரவுக்கு உள்ளாக்கும்.

அவர் அங்கு வந்த காலத்தில் ஆஸ்ரமம் பகுதியில் அமைந்திருந்த இருப்பிடங்கள் இவைதாம்: போஸ் காம்பவுண்ட், மெல்வார் பங்களா, டி.என்.கே.

இல்லங்கள், சிலோன் ராமச்சந்திரன், சாந்தம்மாள், கல்யாணராமன், சுப்பிரமணியம், ஆனந்தம்மாள், சுனிதா சேட்டர் ஜி, சப்ரிஜிஸ்ட்ரார் நாராயண அய்யர், அலமேலு அம்மாள், பொள்ளாச்சி கவுண்டர், டாக்டர். செய்யது, டாக்டர். ஆனந்த நாராயண ராவ், ராமநாத அய்யர், ராஜகோபால அய்யர், கௌரி அம்மாள், லோகம்மாள், ராஜு செட்டியார், கோஹன், மற்றும் தலையார்க்கான்.

இதைப்பற்றி கனகம்மாள் இவ்வாறு எழுதுகின்றார்.

*“பெரும்பாலான வீடுகளில் அவற்றின் உரிமையாளர்களே வசித்தனர்; ஒரு சில வீடுகளைத் தவிர எந்த வீட்டிலும் வாடகைக்கு அறைகளே இல்லை. கடைசியில், ஒரு வழியாக, கோமுட்டி ல க்ஷ்மி அம்மாள் வீட்டில் ஒரு அறை கிடைத்தது. என்னுடைய அறை அக்கட்டிடத்தின் கடைசியில் இருந்தது. பின்பகுதியில் நீண்டிருந்த வேலியின் அருகே பல கறையான் புற்றுகள் இருந்தன. இவற்றிலிருந்து பல பாம்புகள் என்னோடு தங்குவதற்கு வரும் என்பது தெள்ளத் தெளிவாகியது. நான்கு மண் சுவர்களின் மேல் கூரையால் வேயப்பட்ட ஒரு சிறிய அறை. கதவுக்கும் கூரைக்குமிடையே திறந்த வெளி. பூனைகளும், எலிகளும் என்னை முறையாக வந்து பார்ப்பதற்கு இது எளிதாக்கியது. அங்கு மின்சாரமுமில்லை; குடி தண்ணீரும் இல்லை. வீட்டு வளாகத்தில் ஒரு கிணறு இருந்தது; ஆனால், அதில் தண்ணீர் மண் கலந்திருந்தது. ஒவ்வொரு நாளும் காலையில் முதலில் கிணற்றை பயன்படுத்துபவர்கள் அதிர்ஷ்டசாலிகள்; ஏனென்றால், அவர்களுக்கு தெளிந்த தண்ணீர் கிடைக்கும். அதற்கு பின் வருபவர் ஒவ்வொருவரும் மண்ணும் நீரும் கலந்த தண்ணீரையே பயன்படுத்த வேண்டியிருந்தது. இதுவும் குறைந்த அளவே கிடைத்தது. குளிப்பதை ஒருவாறு சமாளித்து விடலாம். ஆனால் துணி துவைப்பதென்ற கேள்வியே எழவில்லை. இவ்வளவு அசௌகரியங்கள் இருந்தாலும் ரமணாஸ்ரமம் அருகிலேயே தங்குவதற்கு அறை கிடைத்துவிட்டதால்*



*என்னை நான் அதிர்ஷ்டசாலியாகவே கருதினேன். சில பானைகள் மற்றும் பாத்திரங்களை கோயில் அருகில் இருந்த கடையொன்றில் வாங்கினேன். புதிய வீட்டில் ஒருவாறு வாழத் தயாராகிவிட்டேன். மெதுவாக, புதிய வாழ்க்கை முறைக்கு பழகிக் கொண்டேன்." (Cherished Memories, p.60)*

இரண்டாம் உலகப் போர் முடிவுற்று சிறிது காலத்திலேயே 1946ல் கனகம்மாள் திருவண்ணாமலைக்கு வந்து குடியமர்ந்தார்; அப்பொழுது ரேஷன் விநியோகம் நடைமுறையில் இருந்தது. அரிசி, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் கிடைப்பதில் கட்டுப்பாடு நிலவியது. பேருந்துகள் ஓடுவதற்கு மண்ணெண்ணெய் கிட்டாததால்

நிலக்கரி பயன்படுத்தப்பட்டது. கனகம்மாள் இதைப்பற்றி இவ்வாறு விமர்சிக்கின்றார்.

*“என் வாழ்க்கை மிகவும் பிரச்சினைகள் நிறைந்ததாய் இருந்திருக்கும் என்றும் நான் துன்பத்தில் உழன்று இருப்பேன் என்றும் வாசகர்கள் கருதலாம். ஆனால், அது அவ்வாறு இருக்கவே இல்லை. பிரச்சினைகளின் சுமையை நான் ஒருபொழுதும் உணர்ந்ததில்லை; ஏனென்றால், அதிகாலையில் கிடைக்கின்ற பகவானின் முகத் தரிசனமே எல்லா கவலைகளையும் என் மனதிலிருந்து விரட்டியடிக்க போதுமானதாய் இருந்தது மட்டுமன்றி மனதில் சந்தோஷத்தையும் அமைதியையும் நிரப்பியது. ஒரு சிறு புன்னகை மட்டுமே என் இதயத்தை வானில் பறக்கச் செய்யும். கிடைத்தற்கரிய உரிமையைப் பெற என்னை தேர்வு செய்தமைக்கு நான் மிகப் பெருமிதம் கொள்கின்றேன்.*

*பகவானின் புன்சிரிப்பின் அழகின் ஈர்ப்பினை விவரிக்க இயலாது. புன்சிரிப்பின் அழகில் ஈர்க்கப்பட்டு மயங்கி அனுபவமாக வேண்டும். அந்த மெலிந்த உருவத்தினுள் அவ்வளவு அளப்பரிய ஆற்றல் அடங்கியுள்ளது என்பதை நம்புவதே மிகக் கடினமானது. தோற்றத்தில் மிகவும் எளிமையானவர் பகவான்; மிகவும் சாதாரண வேலைகளிலேயே அவர் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். இருப்பினும், அந்த வசீகர ஈர்ப்பினால் முழுதும் ஆட்கொள்ளப்படுவதற்கு பகவான் சோஃபாவில் சாய்ந்து தன்னுள் மூழ்கி தானாய் தக்ஷிணாமூர்த்தியாய் அருள்பாலிப்பதை ஒருவர் கண்ணாரக் கண்டு உளமாற தரிசித்து மெய்மறந்து நிற்றல் வேண்டும்.*

*என் குடும்ப வாழ்வின் இன்னல்களும், வெறுப்புகளும் நிறைந்திருந்தாலும், பகவான் தரிசனத்தில், அந்த கவர்ந்திழுக்கும் உருவத்தை உற்று நோக்கி உளம் நிறைந்து இருப்பதற்கும், அவரின் மின்னாற்றல் மிகு சொற்களை செவியாறக் கேட்டு மெய்மறந்து இருப்பதற்கு மேலும் ஒரு நாள் கிடைத்துள்ளது என்ற*

*ஒவ்வொரு நாள் காலையில் எண்ணுகின்ற எண்ணமே என் இதயத்தை வானம்பாடியாய் பாடச் செய்கின்றது. ஆஸ்ரமத்தினுள் நுழையும்பொழுதே என்னுள் ஒரு உள்ளார்ந்த மாற்றம் நிகழ்வதை உணரமுடிகின்றது. சிறுசிறு கவலைகள் திவலையாய் கறைந்து பனியாய் மறைந்தோடிவிடுகின்றது. என் ஒவ்வொரு அணுவும் அமைதி அடைவது என்னால் உணர முடிகின்றது. பகவானின் முதல் தரிசனத்திலேயே எனது என்ற அகந்தை அகழ்ந்து அழிவதை உணருகின்றேன். அவர் அருகில் மேன்மேலும் ஈர்க்கப்பட, மனம் அற்ற உடம்பானேன்; எதுவும் இல்லா எலும்புக் கூடானேன்; இவ்வுணர்வை வருணிப்பது இயலாது." (மேலது.பக்.62)*

*(நன்றி சரணாகதி)*

தொடரும்

---

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2025

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *மே* | 11 | *ஞாயிறு* | *இரவு 8.01* | 12 | *திங்கள்* | *இரவு 10.5* |
| *ஜுன்* | 10 | *செவ்வாய்* | *காலை 11.35* | 11 | *புதன்* | *மதியம் 1.13* |
| *ஜுலை* | 10 | *வியாழன்* | *காலை 11.35* | 11 | *வெள்ளி* | *மதியம் 1.13* |
| *ஆகஸ்ட்* | 8 | *வெள்ளி* | *மதியம் 2.12* | 9 | *சனி* | *மதியம் 1.24* |

# அனுபூதியருள்

## ஸத்ய நாராயணன்

*ஒருவானர மிடுதாவலின் வழியேமன முழல*
*வொருவானர மசையாவர முனதாடலிற் பெறவு*
*மிருள்வேனென தலைவாறுவ தியலாதென லழகோ*
*அருவாயொளிர் ரமணாவுன தனுபூதியை யருளே.* (6)

ஒரு வானரம் தாவலிட்டு தாவலிட்டு அலையும் வழி போல் (என்) மனம் உழல அன்றொரு நாள் தாவும் ஒரு வானரம் உன் முன்னிலையில் அசையாநிலை பெறும்படி திருவிளையடல் செய்து அருள்வோனே இருளிலே உழலும் எனது தாவும் அலைவானது ஆறுவது இயலாது என்று சொன்னால் அது அழகோ? அருவாய் ஒளிரும் ரமணா, நினது அனுபூதி நிலையை எமக்கு அருள்வாய்.

*முற்போகுத லுதவாததை முடையோடறி வதுவோ*
*பிற்போகத லதுவாகினும் பிழையேநிதம் புரிவேன்*
*கற்பூவென மலர்பேறளி கரைமேற்திக ழொளியே*
*அற்பாயுளுள் ரமணாவுன தனுபூதியை யருளே.* (7)

முன்னடைவு அல்லது முன்னேறுதல் என்பது உதவாப் பொருள்களை முடையோடு அறிந்துகொள்வதோ? (இல்லை என்று அர்த்தம், உதவும் சத்பொருளை

---

*“அநுபூதி வெண்பா” எனும் தலைப்பில் முருகனார் இயற்றிய பாடல் தொகுப்பும் இராமநாத பிரம்மச்சாரி இயற்றிய “ரமண ஸ்தோத்ரானுபூதி” பாடல்களையும் ரமண அன்பர்கள் நன்கறிவர். ரமணோதயம் அக்டோபர் 2024 இதழில் “அனுபூதியருள்” முதல் 5 பாடல்கள் வெளியிடப்பட்டன. நிறைவுப் பகுதி பாடல்கள் 6 முதல் 11 வரை இங்கே பிரசுரிக்கப்படுகின்றன.*

அறிவது மட்டுமே) அவ்விதம் உதவாப் பொருள்களின் அறிவைக் குவிப்பது பின்னடைவு எனபதை அறிந்தும் அப்பிழையையே நிதம் புரிகிறேன் கல் போன்ற என் நெஞ்சம் பூவாய் விரிந்து ஒளிரும் பேற்றை வழங்கும் கலங்கரை விளக்காய் கரை நின்று ஒளிரும் சோதிக் கனலே, எனது அற்ப ஆயுளுக்குள் ரமணா, நினது அனுபூதி நிலையை எமக்கு அருள்வாய்.

ஆலந்தனி லகிலம்விழு மவலந்தனை யொழிகோன்
நீலம்படர் மிடறோன்மகன் நிசியெம்பழி கொளநீ
காலந்தரு திரள்நோய்சகி வுடன்நீங்கிடு கனிவே
ஆலம்மமர் ரமணாவுன தனுபூதியை யருளே. (8)

ஆலஹால விஷத்தினில் அகிலம் விழுந்து அவலத்தை அனுபவித்தபோது அதை ஒழித்த அரசனான நீலம்படர்ந்த கழுத்தை உடையோனான சிவனாரின் மகனான நீ, எமது பழி பாவமென்னும் இருளை (விஷத்தை) ஏற்றுக்கொள்ள, அவையே நின் கையில் திரளாக உருண்டு எழுந்தது, காலனான யமன் நினக்கு அளித்த நோயாக மாற, அதனை சகித்து, அதன் காரணமாக உனது உடலை விட்ட கனிவின் உருவே. ஆலமரத்தின் அடியில் அமர் தென்பால் மூர்த்தியே ரமணா, நினது அனுபூதி நிலையை எமக்கு அருள்வாய்.

கடைநாள்வரை சகியேன்பவம் கரையேறுவ தறியேன்
விடைதேடியுள் முகமாழவும் வினைதீரவும் வருவாய்
விடையேறிடு சிவனார்பெரு வரையாயிழு விசையால்
அடைவாயகம் ரமணாவுன தனுபூதியை யருளே. (9)

இந்த பவ வாழ்வை கடைசி நாள்வரை நான் சகித்திருக்க மாட்டேன். இதன் கரையேறுவது எப்படி என்பதை அறியேன் இதிலிருந்து விடுதலை தரும் அந்த விடையைத் தேடி உள்முகம் ஆழவும், வினை தீரவும் நீ வருவாய் விடையில் ஏறிடும் சிவனார் பெரு மலையாய் அருணாசலத்தில் அமர்ந்து, உன்னை விசையால் இழுக்க அகம் அடைந்த குரு ரமணா, நினது அனுபூதி நிலையை எமக்கு அருள்வாய்.

*புண்ணாமிக முழன்றேபல பொழுதோடின புவிமேல்*
*எண்ணாதுள முதிர்வால்மன மெரிதேசிக சரண்நீ*
*கண்ணாயுனை அணைவோர்மனம் கரைபார்வையின்*
*பொழிவே*
*அண்ணாதொளிர் ரமணாவுன தனுபூதியை யருளே. (10)*

புண்ணான இந்த இகத்தில் புரண்டும் உழன்றும் பல பொழுதுகள் ஓடின, புவி மேல் என் மனத்தை எரி தேசிகா, நீயே சரண் கண்ணான உன்னை அணைவோர் மனம், கரையுமாறு பார்வையைப் பொழியும் குருவே. அருகில் அண்டவியலா ஒளிரும் ரமணா, நினது அனுபூதி நிலையை எமக்கு அருள்வாய்.

*பவரோகமென் விதிதீரவும் பணிவேனுளம் பரிவாய்*
*தவராயநின் சுடர்சோணையி னசையானிலை தருவாய்*
*சிவராவினில் முழுவேளையும் தெருள்மௌனமுள் ளமிழ*
*அவராகியென் ரமணாவுன தனுபூதியை யருளே. (11)*

பவ நோயும் விதியும் தீரவும் நின் திருப்பாதங்களைப் பணிவேன். நீ உளம் பரிந்து அருவாய். தவத்தின் ராயனே, உன் சுடராய் ஒளிர் சோணகிரியின் அசையாநிலையைத் தருவாய். சிவ ராத்திரியினில் முழு வேளையும் ஆத்ம அறிவை அறிந்து அதன் மௌனத்துள் யாம் அமிழ ஆசைகளைத் துறந்து, விடு பட்ட ரமணா, நினது அனுபூதி நிலையை எமக்கு அருள்வாய்.

**அருஞ்சொற்பொருள்:**

துமிதல் = அழிதல்,
அவராகி = இச்சையிலிருந்து விடுதலை பெற்றவர்
பிலம் = குகை, துவளுதல் = மறைதல்
தெருள் = நிச அறிவு, நிசி = இருள்.



# தனித்துவமானவர் – நம் ரமணர்

## டாக்டர் வேங்கட் S. ரமணன்

*ஸ்ரீ ரமணாஸ்ரம தலைவர் டாக்டர் வேங்கட் S. ரமணன் கடந்த 9/3/2025 அன்று குரோம்பேட்டை ஸ்ரீ ரமணாலயத்தில் ஆற்றிய உரை.*

தமிழில் முதல் முறையாக நேரடியாக பக்தர்களுடன் பேசுகிறேன். பகவானுடைய உபதேசங்களை கூறுவதில் குறை ஏதும் இருந்தால் அது முழுக்க என்னுடையதாகும். திரு. ஜானகிராமன் அண்ணா, திரு. குமார் ராஜா அண்ணா, ஆசிரியர் ரமணோதயம் மற்றும் ஆசிரியர் குழு மவுண்டன் பாத் திரு. ராம் மோகன் அண்ணா, திரு. P.E. சங்கர் அண்ணா, திரு. P.E. ரமணன் அண்ணா, மீரா ஜி மற்றும் பக்தர்கள் அனைவருக்கும் என் நமஸ்காரங்கள்.

பகவான் ரமண மகரிஷிகளின் புனர்வசு தினமான இன்று (9/3/2025) குரோம்பேட்டை ரமணாலயம் அன்பர்களுடன் உரை ஆற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

பகவான் ரமண மகரிஷிகளின் சரிதம் மற்றும் உபதேசங்களைப் பற்றி ரமண அன்பர்களான நாம் அனைவரும் நன்கறிவோம்.

ஒரு குழந்தை தனக்கு பிரியான உணவை எப்படி மீண்டும் மீண்டும் சலிப்பு ஏற்படாமல் சுவைக்க எண்ணுமோ அப்படி நாம் எத்துனை முறை பகவானைப் பற்றி பேசினாலும் கேட்டாலும் நமக்கு சலிப்பு ஏற்படாது மாறாக அவர் மேல் உள்ள பக்தியும் அன்பும் பல்கிப் பெருகும்.

ரமண மகரிஷிகளின் வாழ்க்கை சரிதம், மரணானுபவம், உபதேசம் என அனைத்துமே மிகுந்த தனித்தன்மை மிக்கவையாகும். அவரது தனித்தன்மையை குறித்து இங்கு சுருக்கமாக பேச உள்ளேன்.

கண்ணால் உனது கதிர்முகம் நாங்கள் காணப் பெற்று
அண்ணால் கண்ணால் ஆம்பயன் ஆர்ந்தனம் என்பாரால்
எண்ணா நின்றார் இதயத்து ஒளிரும் ரமணப்பேர்
அண்ணா மலையான் புனர்வசு நன்நாள் அதுவண்ணம்

இறைவன் கண்களை நமக்களித்தது பகவான் தரிசிப்பதற்கே முருகனார் என்கிறார். மேலும் முருகனார் கூறுகிறார்.

இலகும் புகழால் எண்திசை போர்த்த ரமணன் பேச்சு
அலகில் களிப்பாம் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்

சதாசிவ மூர்த்தியான பகவான் புகழ் அனைத்துலகிலும் பரவ வேண்டும் என்கிறார்.

சார்கதி காட்டும் சதாசிவ மூர்த்தி ஜயந்திசீர்
மார்கழி மாதப் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்

நம் ஆச்ரமத்தில் KVS மாமா அவர்கள் இயற்றிய

ஒளியாய் வந்து, ஒளியாய் இருந்து, ஒளியாய் மறைந்து ஒளியாய் எங்கும் நிறைந்தாயே சத்குரு ரமணா...

பாடலிலும், பகவான் பிறந்தபோது கண்பார்வையற்ற ஒரு மூதாட்டி ஒரு ஒளியைக் கண்ணுற்றாள். அக்னித் தலமான அருணாசலத்தில் ஞான ஒளியினைப் பெற்றார். பகவான் தேகத்தை விடும் சமயத்தில் ஒளியாய் அருணாசலத்தில் மறைந்தார்.

இப்பொழுது நாம் ஏன் ரமணரை கொண்டாட வேண்டும் என்று சில காரணங்களை கூறுகின்றேன்.

மரணானுபவம்:

எண்ணற்ற ஆத்ம ஞானிகள், பொதுவாக, வீட்டைத் துறந்து, கடுந்தவம் இயற்றி, படிப்படியாக பல காலங்கள் முயன்றுதான் முழுமையான ஞானத்தை அடைந்தனர். ஆனால் 16 வயதுடைய சாதாரண மாணவன் ஒருவன் எந்தவித முயற்சியுமின்றி தன்னிச்சையாக அவனுக்குள் நிகழ்ந்த மரண அனுபவத்தின் வழியாக ஆத்ம ஞானம் அடைந்தான்.

உடல் இறந்து விடும். ஆனால் 'நான்' என்ற உணர்விற்கு அழிவில்லை. உடல் வேறு, 'நான்' வேறு. அழிவற்ற ஆன்மாவே 'நான்' என்பதை உணர்ந்து ஆன்ம விழிப்புணர்வை அடைந்து ஒரு மகா ஞானியாக உருவானார். ஒரு மலர் மலர்வதைப் போன்ற இந்த நிகழ்வு தனித்துவமானதாகும்.

*அருணாசலத்தின் முக்கியத்துவம்:*

அருணாசலத்தோடு மகிமை உலகமெங்கும் பரவியுள்ளது. பகவான் மற்றும் அருணாசலம் பிரிக்க இயலாதது. அருணாசலத்திற்கு பகவான் ரமணர் வந்த பிறகு அருணாசலத்தில் பெருமை உலகமெங்கும் பரவியுள்ளது என்பதை பெருமையாக உரைக்கின்றேன்.

அருணாசலம் என்ற பெயரை கேட்ட மாத்திரத்திலேயே, நான் என் தகப்பனாரைத் தேடிக் கொண்டு செல்கிறேன் என்று கடிதம் எழுதிவைத்து, வீட்டைத் துறந்து அருணாசலத்தை அடைந்தது. தனது வாழ்வை முழுமையாக அருணாசலத்திற்கே அர்ப்பணித்தது. இயற்கை இன்னல்கள், பொல்லாத போலி சாதுக்களின் தொல்லைகள், பெற்ற அன்னை, உறவினர்களின் வேண்டுதல் என எல்லாவித இடையூறுகளையும் வைராக்கியத்தோடு தவிர்த்து 54 வருடங்கள் அருணாசலத்தை விட்டு அகலாது இருந்தார். இது ரமணரின் வைராக்கியத்தின் தனித்துவமாகும்.

*"நான் யார்?" என்ற கேள்வி:*

சிக்கலான உபதேசங்கள், தத்துவங்கள் மற்றும் வெளிப்புற சடங்குகளை எல்லாம் தவிர்த்து நம்மை நாமே அறிந்து கொள்ள நான் யார்? என்ற சுய விசாரணை வாயிலாக எவரும் ஆத்மாவை உணர்ந்து ஆத்ம சாட்சாத்காரம் அடையலாம் என்னும் எளிமையான நேரடியான மார்க்கத்தை உபதேசித்தார். ஐயே அதிசுலபம்! என்று அவர் வழங்கிய இந்த விசார

*மார்க்கம் மதம், இனம், மொழி, நாடு என்ற எந்த பாகுபாடில்லாதது.*

*பக்தர்கள் சுமார் 120 நாடுகளிலிருந்து ஆச்ரமம் வந்து செல்கின்றனர். இது ஒரு அதிசயம். நாம் எங்கும் சென்று ரமணரின் உபதேசத்தை பரப்பவில்லை. அவர்களாகவே பகவானை அறிந்து வருகின்றனர். நெகிழ்வான சம்பவம் ஒன்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். இஸ்ரேல் நாட்டில் ஒரு தாக்குதலில் பாதிக்கப்பட்டு தங்கள் குழந்தைகளை இழந்த ஐந்து தாய்மார்கள் ஆச்ரமத்திற்கு வந்து ஐந்து நாட்கள் தங்கினர். துயரம் என்பது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட விஷயமாக இருந்தாலும் அவர்கள் செல்லும்போது நல்ல மாற்றத்துடன் காணப்பட்டார்கள். அவர்களில் இருவர் தங்கள் குழந்தையின் பெயரை ரமணாச்ரமத்தில் புதைத்து விட்டு இங்கேயே ரமணருடன் அவர்கள் சேர்ந்து இருக்க வேண்டும் என்று கூறிவிட்டுச் சென்றனர். இது என்ன ஒரு வியப்பான நிகழ்வு. இறந்த குழந்தைகளின் பெற்றோர்களை இஸ்ரேல் நாட்டு அரசாங்கம், ஆச்ரமத்திற்கு கடந்த ஆண்டு அனுப்பி வைத்தது. இதெல்லாம் பகவானின் சாந்நித்யம் என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.*

*பேராசிரியர் சுவாமிநாதன், பகவான் ஒரு விஞ்ஞானி என்று கூறுவார். பக்தர்களுக்கு அவர் ஞானி. அறிவியல் பூர்வமான எண்ணங்கள் கொண்டவர்களுக்கு அவர் ஒரு விஞ்ஞானி. பக்தி இல்லாதவர்கள்கூட விஞ்ஞான பூர்வமான அவர் கூறிய ஞான மார்க்க முறையைப் பின்பற்றி முக்தி அடையலாம்.*

*அவர் இதயத்தில் இருந்து நமது இருதயத்திற்கு அவர் பெற்ற அனுபவம் வந்து அமர்ந்து கொள்ளும். இதில் சந்தேகமேயில்லை.*

*எந்த மதமானாலும், எந்த மொழியானாலும் தங்கள் சம்பிரதாயத்தில் இருந்து மாறாமல் இந்த நான் யார்*

விசார மார்க்கத்தை கடைப்பிடித்து கடைத்தேறலாம் என்பது இதன் தனித்துவமாகும்.

ஞான நிலையின் உயர்ந்த நிலையை தான் அடைந்ததுபோலவே, பாமரர் பண்டிதர் என்ற பாகுபாடு இன்றி இவ்வுலகின் அனைத்துயிர்களும் நான் யார் என்ற எளிமையான நேர்வழியை பின்பற்றி ஆத்ம சாட்சாத்காரத்தினை அடையலாம் என்று திட நம்பிக்கையை அனைவருக்கும் அருளினார்.

**மௌனத்தின் சக்தி:**

பகவான் பொதுவாக மௌனத்தின் வாயிலாகவே போதித்தார். அவரது அருகாமையில் (அவர் தேகத்தோடு இருந்தபோதும் தற்போது அவரது சந்நிதியிலும்) அனைவரும் அமைதியையும் நிம்மதியையும் பெற்று வருகின்றனர்.

மௌனம் என்பது வெறுமனே வாயை மூடி மௌன விரதம் இருப்பதன்று. மாறாக எண்ணங்கள் இல்லாமல் அல்லது எண்ணங்களை படிப்படியாக குறைத்தலே நிஜ மௌனம். சூரியனின் ஒளி எவ்வாறு மரம் செடி முதல் உலகின் அனைத்து ஜீவராசிகளுக்கும் தடையில்லாமல் சென்றடைகின்றதோ அவ்வாறு இந்த மௌன உபதேசம் அனைவரையும் அடைந்தது.

இந்த மௌனத்தின் சக்தியை நடைமுறையில் செய்தது பகவானது தனித்தன்மையின் முக்கிய அம்சமாகும்.

தக்ஷிணாமூர்த்தியின் மறு அவதாரம் ரமணர். வார்த்தைகளுக்கே இவ்வளவு சக்தி இருந்தால் அதன் மூலமான மௌனத்திற்கு எவ்வளவு சக்தி இருக்கும் என்று பல இடங்களில் உபதேசித்திருக்கிறார்.

**பகவான் அருளிய நூல்கள்:**

பகவான் அறிவுசார் விஷயங்களைவிட மன அமைதிக்கு முக்கியத்துவம் அளித்தார். பக்தர்கள்

தேவைக்காகவும் தமக்குள் தாமாகவே ஸ்புரித்த சில பாடல்களையும் அவ்வப்போது அருளினார். அவைகள் மிக ஆழமான கருத்துக்களைக் கொண்ட அக்ஷரணமணமாலை, ஸ்துதி பஞ்சகம், உள்ளது நாற்பது, உபதேச சாரம் போன்ற துதிப்பாடல்களாக அமைந்தன. தமிழ் மட்டுமல்லாது தெலுங்கு, மலையாளம் மற்றும் சம்ஸ்கிருதம் போன்ற மொழிகளிலும் பாக்களை இயற்றினார்.

பகவான் நேரடியான அனுபவத்திற்கு முக்கியத்துவம் அளித்தார். உண்மையான ஞானம் வெளியில் இல்லை நமக்குள் இருந்துதான் வர வேண்டும் என்று உபதேசித்தார். தனித்துவம் மிக்க அவர் அருளிய நூல்கள் ஆன்மாவை உணர விழையும் சாதகர்களுக்கு வழிகாட்டுகின்றது. பகவான் 27 வயதில் அருளிய நான் யார்? நூல் ஆத்ம சாட்சாத்காரத்தை அடைய விரும்பும் சாதகர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றது.

**இயல்பில் இருத்தல்:**

ஞானம் என்பது நாம் அடைய வேண்டிய ஒன்று அல்ல, ஏற்கனவே இருக்கும் நம் நிலையே அது. “நான்” என்ற எண்ணத்தை நீக்கி, நம் இயல்பான அமைதியையும், மகிழ்ச்சியையும் உணர வேண்டும் என்ற நம் ஒவ்வொருவரின் இயல்பு நிலையே ஞானம் என்று உரைத்தது தனித்துவம் அல்லாது வேறென்ன?

**எளிமையும், அணுகக்கூடிய தன்மையும்:**

தான் ஒரு ஞானி, அல்லது மடாதிபதி என்ற ஒரு தோரணையில் அவர் எப்போதும் இருந்தது இல்லை. மாறாக நமது குடும்பத்தில் உள்ள ஒரு பெரியவர் போல் அவரது தோற்றம் மற்றும் தினசரி நடவடிக்கைகள் இருந்தன. யாரும் அவரை எளிதில் அணுகும் படி வாழ்ந்தும் காட்டினார். பகட்டு இல்லாத இந்த தனித்துவம் மிகவும் போற்றத்தக்கது.

*சமத்துவம்:*

*பாமரன் முதல் பண்டிதர் வரை அனைவரையும் சமமாகவே பாவித்தார். அவரவர் தன்மைக்கேற்ற அவர்கள் புரிந்து கொள்ளும் பக்குவத்திற்கேற்ப உபதேசங்களை அருளினார்.*

*அன்னைக்கு முக்தி அளித்தது போலவே அஃறினைகளான பசு, காகம், மான் என அனைத்துயிர்களுக்கும் முக்தி பேற்றினை அருளினார்.*

*அறிஞர்களுடன் ஆன்மிக விஷயங்களை உரையாடுவது மட்டுமல்லாது தினசரி பாகசாலைக்கு சென்று காய்கறி நறுக்குவது, சமைத்தல் போன்ற வேலைகளை தாமே செய்தார். அடுக்களையிலும் ஆன்மிகத்தை உணர்த்தினார். சமத்துவத்திலும் எளிமையிலும் கூட தனித்தன்மை வாய்ந்தவர் பகவான் ரமணர்.*

*பாகசாலையில் சேவைசெய்து வந்த கைம்பெண்களுக்கெல்லாம் உயர்ந்த ஞான உபதேசத்தை அவர்கள் பக்குவத்திற்கேற்ப எளிமையாக உபதேசித்தார். அனைவருக்குள்ளும் ஞானியைக் கண்டார்.*

*“கிராமத்தில் இருந்து வந்த எளிய பக்தருக்கு நான் யார்? உபதேசிக்கின்றீர்களே?” என்று பகவானிடம் கேட்டார்களாம். பகவான் அதற்கு, “என்ன பண்றது ஓய், எனக்கு தெரிந்தது அதுதான்” என்றார்.*

*தேகாபிமானம்:*

*உடல் நான் அல்ல என்று உபதேசித்த அவர், தனது தேகம் புற்றுநோயால் அவதியுற்ற போதும் அதை பொருட்படுத்தாது நான் இந்த தேகம் அல்ல. தேகத்திற்குத் தான் அழிவு. ஆன்மாவுக்கு அல்ல. என்ற அவரது உபதேசத்தின்படி வாழ்ந்து காட்டினார்.*

*புற்றுநோய்களிலேயே பகவானுக்கு வந்த புற்றுநோய் மிகவும் கொடியது. மிகுந்த வலி கொடுப்பது.*

அதை அவர் ஏன் வரமழைத்துக் கொண்டார் என்றால், என்னுடைய கருத்தின்படி, வெறும் வார்த்தைகளால் நான் உடம்பு இல்லை என்று கூறாமல், அவர் உபதேசத்தை வாழ்க்கையிலும் வாழ்ந்து காட்டினார். அவர் வாழ்க்கையே ஒரு உபதேசம்தான்.

வருந்திய அன்பர்களுக்கு தேகம் மறைந்தாலும் நான் எங்கு செல்வது இங்கே தான் இருக்கிறேன் என்ற அவர் வாக்குறுதி தந்தபடி தனது சாந்நித்யத்தை அன்பர்கள் உணர வைத்து செயலிலும் காட்டியுள்ளார்.

*அவரது சாந்நித்யத்தின் சக்தி:*

அருணாசலம் அவரை ஈர்த்து வந்தது. அருணாசலத்திலேயே அவர் ஒளியாய் கலந்தார். அப்பாவுக்குள் பிள்ளையாய் அவருள் கலந்தார். அவர் தேகத்தோடு இருந்த பொழுதைவிட அவரது சாந்நித்யத்தின் சக்தி உலகெங்கிலும் உள்ள எண்ணற்ற ஆன்ம சாதகர்களினுள் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி தன்னகத்தே ஈர்க்கும் அவரது இருப்பின் ஆழத்தை நாம் யாவரும் உணர்கின்றோம்.

அவர் தேகத்தில் இருந்ததைக் காட்டிலும் தற்போது அவரது சாந்நித்யத்தில் ஆச்ரமத்தை இயங்கிக் கொண்டு இருக்கின்றார். சாதகர்களை ஈர்த்து அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்கிறார்.

சிலருக்கு சில நிமிடங்களிலேயே பூரண அமைதி கிடைகின்றது. சிலர் பலநாட்கள், வருடங்கள் தங்கி அந்த அமைதியை பெற விழைகின்றனர். ரமண நகரிலேயே பல நாடுகளில் இருந்து வந்து தங்கி பல ஆயிரம் பக்தர்கள் பகவான் உபதேசங்களை பின்பற்றுகின்றனர்.

ஒவ்வொருவர் வாழ்விலும் பகவான் எவ்வாறு நுழைந்தார். எவ்வாறு தங்களை ஆட்கொண்டார் என்ற கதைகள் மிகுந்த சுவாரசியமானவை. ஒரு நூலாக

வெளியிடும் அளவுக்கு நிறைய சம்பவங்களை நான் கேட்டிருக்கிறேன்.

உலகெங்கிலும் இருந்து இளைய தலைமுறையினரையும் சிறு குழந்தைகளையும் ஆச்ரமத்தில் காண முடிகின்றது. பகவானது சாந்நித்யத்தையும் அவர் அளிக்கும் அமைதியையும் அவர்கள் உணர்வதாலேயே அவர்கள் இங்கு வர விழைகின்றனர்.

இத்தகைய தனித்தன்மைகள் கொண்ட ரமண மகரிஷிகள் இந்த உலகில் தோன்றி 145 ஆண்டுகள் ஆனாலும் எக்காலத்திற்கும் ஏற்றதாக அமைந்துள்ள அவரது உபதேசங்கள் என்றும் புதியதாக அனைத்து வயதினர்க்கும் பயன்படுவது தனித்துவத்திலும் தனித்துவமாகும்.

நன்றி.

## இனிவரும் திருநாட்கள் 2025

| பூஜை/விழா/பண்டிகை | ஆங்கில தேதி | |
|---|---|---|
| ஸ்ரீ ராம நவமி | 06/04/2025 | ஞாயிறு |
| தமிழ் வருடப் பிறப்பு | 14/04/2025 | திங்கள் |
| பகவான் 75ஆவது ஆராதனை | 25/04/2025 | வெள்ளி |
| மகாபூஜை | 21/05/2025 | புதன் |
| பசு லட்சுமி ஆராதனை | 07/07/2025 | திங்கள் |
| குருபூர்ணிமா | 10/07/2025 | வியாழன் |



# ஆதிசங்கரரின் பக்தி -வேதாந்தம்

**டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்**

## அத்தியாயம் -2

*கடற்கரையில் ஒரு கருணாமூர்த்தி*

*ஆதிசங்கர பகவத்பாதர் வேதாந்த உலகில் தோன்றிய ஓர் அற்புத ஜோதி. 32 வயதே வாழ்ந்த அவர், அந்தக் குறுகிய காலத்தில் பல நூல்களை இயற்றினார். அவற்றுள் பல முழுவதும் ஞான மார்க்கமான அத்வைதம் சம்பந்தப்பட்டவை. சில பக்தியைப் பிரதானமாகக் கொண்டவை. அவர் நூல்கள் பற்றிய எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு ஒரு கருத்தில் பிரிக்கப்பட்டுள்ளன.*

1. *பாஷ்ய கிரந்தங்கள் 15, பிரம்ம சூத்ரம், பகவத்கீதை, உபநிஷத்துகள், விஷ்ணு சஹஸ்ரநாம் போன்றவை*
2. *பிரகரண கிரந்தங்கள் 55, விவேக சூடாமணி, தத்வ போதம், அத்வைத அநுபூதி போன்றவை*
3. *பக்தி கிரந்தங்கள்: கணேசர் பற்றியவை 2; சுப்ரமண்யர் 1; பரமேஸ்வரன் 19; அம்பாள் 25; மஹாவிஷ்ணு 19; மகாலக்ஷ்மி 1; ஹனுமான் 1*
4. *க்ஷேத்ரங்கள்/தீர்த்தங்கள்: காசி 3; ஜோதிர்லிங்கம்1; கங்கை 2; யமுனை 1; நர்மதை 1; மற்றவை 4*

*(இந்த எண்ணிக்கை மற்ற சில ஆராய்ச்சியாளர் களிடமிருந்து சற்று வேறுபடுகிறது.) இவையெல்லாமே சங்கரர் இயற்றியதுதானா என்ற ஐயப்பாடும் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. பல ஆராய்ச்சியாளர்கள் மாறுபட்ட கருத்துகளைப் பேசுகின்றனர்.*

*இவருடைய பக்தி நூல்களில் சில, குறிப்பிட்ட ஆலயங்களில் உள்ள மூர்த்தியைக் குறித்துப்*

பாடப்பட்டவை. சுப்ரமண்ய புஜங்கமும் அன்னபூர்ணா அஷ்டகமும் இதற்குச் சிறந்த உதாரணம். புண்ணிய நதிகளான கங்கை, யமுனை, நர்மதை மற்றும் காசி போன்ற புண்ணிய க்ஷேத்திரங்கள் குறித்தும் இவர் துதிகளை அமைத்துள்ளார். சில துதிகள் ஏதாவது ஒரு பலனை உத்தேசித்து செய்யப்பட்டவை. கனகதாராஸ்தவம் ஒரு பரம ஏழையான பெண்ணுக்கு பொருள் செல்வம் வேண்டி மஹாலக்ஷ்மியைக் குறித்த பிரார்த்தனையாக அமைந்தது. சிவமானஸ ஸ்தோத்திரம் நம் உள்மனதில் சிவனை ஸ்தாபித்து எல்லா வித பூஜைகளையும், நெய்வேத்தியங்களையும் மானசிகமாக அளிக்கும் விதத்தில் அமைந்து. பஜகோவிந்தம், பக்தி போதனை வடிவில் அமைந்த வேதாந்த உபதேசம். மனீஷாபஞ்சகம், நிர்வாண சதகம் போன்ற சில, முழுவதுமே சித்தாந்த வடிவில் அமைந்தவை. சௌந்தர்யலஹரி, சிவாநந்தலஹரி போன்றவை மிக அழகிய இறை வடிவத்தையும் குணங்களையும் பற்றி இலக்கிய நயத்தோடு பாடக்கூடியவை.

அந்த முறையில் முதலில் திருச்செந்தூரில் அவர் இயற்றிய சுப்ரமணிய புஜங்கம் என்னும் அழகிய கிரந்தத்தைப் பார்ப்போம். இது முழுக்க முழுக்க பக்தி என்னும் சித்தாந்தத்தையே அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட நூல். இதில் தன்னை ஒரு மிகஸ் சாமானியனாக ஏற்றுக் கொண்டு ஆதிசங்கரர் அவன் புகழ் பாடுகிறார்; அவன் அருளை வேண்டுகின்றார். இதைப்பற்றி கர்ண பரம்பரையாக ஒரு கதை உண்டு. இதன் உண்மைத் தன்மை குறித்து நிச்சயமாக அறுதியிட்டுக் கூற சான்றுகள் இல்லை.

ஆதிசங்கரரின் புகழ் இந்த பாரதவர்ஷம் எங்கும் பரவியதைக் கண்டு சிலர் பொறாமையுற்றார்கள். அவர்களில் அபிநவகுப்தரும் ஒருவர். அவர் கல்விக் கேள்விகளில் சிறந்தவர் தன்னுடைய மந்திர சக்தியால்

சங்கரருக்குக் காசநோய் பிடிக்கும்படி செய்கிறார். அதனால் துன்புற்ற ஆதிசங்கரர் பரம்பொருளான பரமசிவனை வணங்க, அவர் சூரபத்மன் போன்ற மாபெரும் அரக்கர்களை என் குமாரனாகிய ஜெயந்திநாதன் வென்ற இடம் ஜெயந்திபுரம் என்னும் திருச்செந்தூர் தலம். அங்கு சென்று அவனை தோத்திரம் செய் அதனால் உன்னை பிடித்த இந்த நோய் நீங்கும் என்று அருளினார்.

அவ்வாறு அவரும் திருச்செந்தூர் செல்கிறார். அங்கு முருகனுடைய அழகிய வடிவைக் காண்கிறார். அதுமட்டுமா? ஆதிசேஷன் என்னும் நாகமே அந்த முருகனுக்குப் பூஜை செய்யும் அதிசயத்தைக் காண்கிறார். அதைக் கண்டவுடன் அவர் உள்ளத்தில் ஒளி பிறக்கிறது. பாம்பிற்கு சமஸ்கிருதத்தில் புஜங்கம் என்று பெயர். பாம்பு நெளிந்து நெளிந்து செல்லும் விதத்தில் அமைக்கப்படும் செய்யுள் புஜங்க விருத்தமாகும். இந்த விருத்தத்தில் 33 சுலோகங்களை அமைத்து தருகிறார் ஆதிசங்கர பகவத் பாதர். இதுவே திருச்செந்தூர் சுப்பிரமணிய புஜங்கம் என்று அழைக்கப்படுகிறது.

பாடுவதற்கு இனிய மெட்டிலே அமைந்தவை இந்த சுலோகங்கள். இதன் சொல் அழகும், பொருள் அழகும் மனதைக் கவரும். கணேச புஜங்கம், சாரதா புஜங்கம், சிவ புஜங்கம் என்று பல தோத்திரங்கள் இந்த விருத்தத்திலே அமைந்து இருந்தாலும் புஜங்கம் என்றாலே அனைவருக்கும் நினைவுக்கு வருவது இந்த திருச்செந்தூர் சுப்பிரமணிய புஜங்கம் ஒன்றே.

முதலில் விநாயகர் வழிபாடு செய்கிறார். அவன் என்றும் பால ரூபம் கொண்டவன்; இருப்பினும் விக்னங்கள் என்னும் மலையைத் தவிடுபொடியாக்குபவன். யானை முகத்தோன், சிவனை மகிழ்விப்பவன். கணேசன் என்னும் நாமம் கொண்டவன். இத்தகைய நம்மால் விவரிக்க முடியாத ஒரு மங்கள மூர்த்தியை வணங்குகிறேன்.

*ஸதா பாலரூபாபி விக்நாத்ரி ஹந்த்ரீ*
*மஹாதந்தி வக்த்ராபி பஞ்சாஸ்ய மாந்யா*
*விதீந்த்ராதி ம்ருக்யா கணேஸாபிதா மே*
*விதத்தாம் ஸ்ரியம் காபி கல்யாண மூர்த்தி : 1*

இதில் சுவாரசியம் கடைசி வரியில் உள்ள காபி என்னும் சொல். எதோ ஒரு எனப் பொருள் படுவது. வினாயகன் புகழை ஒரு சுலோகத்தில் அடக்க முடியாது. அத்தகைய உயர்ந்தவன். அதனால் நான்கைந்து குணங்களை மட்டும் சொல்லி இன்னும் பலவேறு குணங்கள் கொண்ட ஒரு மூர்த்தி என்று வியப்புடன் சொல்லி முடிக்கிறார் ஆதி சங்கர். இதற்கு 'விஸ்மயம்' என்று பெயர். ருக் வேத மந்திரமான புருஷ சூக்த்ததில் ஒப்பற்ற ஒரு புருஷனை வர்ணிக்கிறார் ரிஷி. ஆயிரம் தலைகள், கண்கள், கைகள் கொண்டவன். எங்கும் வியாபித்திருப்பவன். இப்படிப் பல குணங்களைச் சொல்லி 'இவையே அவன் பெருமை' (ஏதாவானஸ்ய மஹிமா) என்று விளக்குகிறார். உடனே தோன்றுகிறது, 'இவ்வளவுதானா அவன் பெருமை; இல்லை இன்னும் ஏகப்பட்து இருக்கிறதே.' என்று தோன்றுகிறது. சுதாரித்துக் கொண்டு 'இல்லை இன்னும் நிறைய இருக்கிறது' என்று தெளிகிறார். (அதோ ஜ்யாயாகுஸ்ச பூருஷ:). அதே பாணியில், சங்கரரும் ஒரு விவரிக்க இயலாத (காபி) கல்யாண மூர்த்தி என்று சொல்லி முடிக்கிறார். சுபமான ஆரம்பம்.

சரி, ஆரம்பித்தாகிவிட்டது. அடுத்தது முருகனைப் பற்றிப் பாட வேண்டியதுதானே! பரம ஞானியும் வேதாந்தத்தின் மிக உயர்ந்த நூல்களுக்கெல்லாம் பாஷ்யம் செய்தவருமான அந்த மகானுக்கு ஒரு பிரச்சனை ஏற்படுகிறது. அந்த அழகிய வடிவத்தைப் பார்த்து மெய்மறந்து போகிறார். 'என்ன சொல்வது என்றே தெரியவில்லை. சொற்களை நான் அறியேன். அதை எப்படி யாப்பின்படி கவிதையாக்குவது என்றும் எனக்குத் தெரியாது. கவிதையும், நாடகமும்,

தோத்திரங்களும் நான் அறியாதவை. ஆனால் ஆறு முகமான ஒரு ஞான ஒளி என்னுள் புகுந்து ரசவாதம் செய்கிறது. என்னையறியாமல் அழகிய வரிகள் என் வாயினின்று புறப்படுகின்றன. இது என்ன விந்தை?' என்று மெய் சிலிர்க்கிறார். நாம் முன்பே கண்டபடி இவர் செய்யாத தோத்திரமோ சித்தாந்த உரைகளோ இல்லை. சமஸ்கிருத மொழியில் கரை கடந்த ஞானம் படைத்தவர். இவருக்கா இந்தத் தடுமாற்றம்?

இல்லை, இது இறைவனின் சித்தம். மிகச் சிறந்த நூல்களுக்கு ஆண்டவனே வழிகாட்டுவான் என்பது நம் மரபு. கம்ப ராமாயணத்துக்கும் பெரிய புராணத்துக்கும் முதலடி எடுத்துத் தந்தவன் அவனே. அதனால் 'உலகெலாம்' என்னும் முதலடியை சேக்கிழாருக்கும், 'உலகம் யாவையும்' என்பதை கம்ப நாட்டாழ்வாருக்கும் அவன் அமைத்துத் தர, நமக்கு மிகச் சிறந்த பக்தி காவியங்கள் கிடைத்தன. அதேபோல கந்த புராணத்திற்கு 'திகட சக்கரம்' என்ற சொல்லை முருகன் எடுத்துத் தர அதை முதலடியாக வைத்து கச்சியப்ப சிவாச்சாரியார், தன் நூலைப் படைக்கிறார். அதே போன்று இங்கும் இறைவன் அருளாலேயே நூல் இயற்றப் படுகிறது என்பதே சங்கரர் சுட்டிக் காட்டும் உண்மை. இது இந்திய மண்ணுக்கே உரிய காவியக் கலாச்சாரம்.

முதலில், சங்கரர் மற்ற தலங்களில் குன்றுதோராடும் முருகனாக அமர்ந்து இருக்கும் தெய்வம், செந்தூரில் கடற்கரையில் அமர்ந்திருக்கும் காரணத்தை ஆராய்கிறார். அங்கு அலைகள் வந்து விலகிப் போய்க் கொண்டே இருப்பதுபோல இங்கு வரும் பக்தர்களின் துயரங்கள் விலகிவிடும். அதுமட்டுமல்ல அவர்கள் பிறவிப் பிணி என்னும் சம்சார சாகரத்தில் இருந்து விடுபட்டு விடுவார்கள் என்று உணர்கிறார்.

அழகான விளக்கம். குன்றின் உச்சியில் இருந்தாலும் கடற்கரையில் இருந்தாலும் காப்பவன் அல்லவா அந்த முருகப் பெருமான்!

பிறகு அவனுடைய அங்க வருணனை அழகான நடையில் தொடர்கிறது. பகவத்பாதரின் சப்தங்களின் அலங்காரம் இந்த புஜங்கம் என்னும் மெட்டில் புதுப் பொலிவடைகிறது. எளிதில் மனதில் ஒட்டிக்கொள்கின்றன அவர் வரிகள். பக்தர்களுக்குப் புகலிடமான அவன் கால்கள், மனோகரமான சிற்றிடை, அழகிய விரிந்த மார்பு, திருக்கரங்கள், வசீகர முகம், மயக்கும் புன்னகை இவற்றை அழகு சொட்ட வருணித்து விட்டு, அவன் கண்களை நோக்குகிறார். அவை காது வரை நீண்டிருக்கின்றன. அவனுடைய ஆறு தலைகளிலுள்ள பன்னிரெண்டு கண்களிலும் தயை என்னும் அருட்பிரவாகத்தைப் பார்க்கிறார். அப்பப்பா எத்தனை கருணை!

அதைக் கண்டவருக்கு, சற்று வருத்தம் கலந்த கோபம். ஏன் மற்ற அங்கங்களைக் கண்டு உவகை மிகக் கொண்டவருக்கு, கண்களைக் கண்டவுடன் மாத்திரம் ஏன் இத்தகைய மனோநிலை? காரணம் இருக்கிறது. மற்ற அவயவங்களை விட கருணையை இயல்பாக் காட்டுவது கண்கள்தான். கந்தப் பெருமானுக்கோ, மற்ற யாரிடமும் இல்லாத விதமாக பன்னிரெண்டு கண்கள் உள்ளன. இத்தனை நயன கமலங்களை உடைய ஓர் இறைவன், ஒரு கண்ணால்... அதுகூட வேண்டாம், ஒரு கடைகண்ணால்... அதுவும் ஒரே ஒரு முறை நோக்கினாலே போதுமே, என் குறைகளெல்லாம் தீர்ந்து விடுமே, அப்படிச் செய்தால் அவனுக்கு என்ன குறை வந்து விடும்? என்று வினவுகிறார் அந்த அத்வைதப் பெருந்தகை.

இந்த அழகிய வரிகளை சற்று நோக்குவோமா?

விஸாலேஷு கர்ணாந்த தீர்கேஷ்வஜஸ்ரம்
தயாஸயந்திஷு த்வாதஸஸ் வீக்ஷணேஷு
மயீஷத் கடாக்ஷ: ஸக்ருத் பாதிதஸ் சேத்
பவேத் தே தயாஸீல கா நாம ஹாநி: 15

கடைசி இரண்டு வரியில்தான் நயம்.

**ஸக்ருத் பாதிதஸ் சேத்** – ஒரே ஒரு முறை (உன் கடாக்ஷம்) என் மேல் விழுந்தால் **தே** – உன்னுடைய; **தயாசீல** – கருணை என்னும் குணத்திற்கு; **கா நாம ஹானி: பவேத்** – என்ன குறை வந்துவிடும்?

ஒப்பற்ற அந்தத் துறவி இந்த வரிகளை நம்மை உத்தேசித்துத்தான் பாடியிருக்கிறார். பலமுறை நாம் இறைவன் நம்மிடம் பாராமுகமாக இருக்கிறான் என்று வருந்துகிறோம். எல்லோரிடமும் உன் கருணையைப் பொழிகிறாயே, என்னைக் கண்டால் மட்டும் உனக்கு அப்படி என்ன கோபம்? ஒருமுறை எனக்குக் கருணை செய்ய மாட்டாயா என்னும் தாபம் நம்மில் பலருக்கும் உண்டு. இதை நம் பக்ஷத்தில் இருந்து முன் வைக்கின்றார் அந்த பற்றுகளைத் துரந்த பரமஹம்சர்.

அடுத்து அவர் ஞானக்கண்களில் ஒரு திருவிளை யாடல் தென்படுகிறது. பிறப்பு இறப்பு; இன்பம் துன்பம் என்னும் இந்த பந்தங்களுக்கு அப்பாற்பட்ட கைலயங்கிரியில் ஒரு அழகிய காட்சி. தாயாகிய பார்வதியின் மடியில் குழந்தை வேலாயுதன் அமர்ந்து இருக்கிறான். பரமசிவனார் தன் மகனை அன்புடன் பார்த்து இரண்டு கரங்களையும் விரித்து 'குழந்தாய், இங்கே வா' (இஹ–ஆயாஹி–வத்ச) என்று அழைக்கிறார். குழந்தைக்குக் குதூகலம் தாங்க முடியவில்லை. தாயின் கரங்களிலிருந்து எம்பிக் குதித்து தந்தையைக் கட்டிக் கொள்கிறது. சுவாமிநாதனாக, தகப்பன்சாமியாக, வேத முதல்வனான அந்தப் பரமனுக்கே ஓங்காரப் பொருளுரைத்த அந்த இறைத் தத்துவம், இங்கே தன்னைப் பால்மணம் மாறாத மழலையாக் காட்சி தரும் அழகு ஒவ்வொரு பக்தனையும் மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்த்துகிறது.

இஹாயாஹி வத்ஸேதி ஹஸ்தாந் ப்ரஸார்யா
ஹ்வயத்யாதராத் ஸங்கரே மாதுரங்காத்

---

[1] *https://www.advaitavedanta.org/texts/Complete_Works_ofAdishankara.html*

*ஸமுத்பத்ய தாதம் ஸ்ரயந்தம் குமாரம்*
*ஹராஸ்லிஷ்ட காத்ரம் பஜே பால மூர்த்திம் 18.*

இதுவரை குமரனின் அழகையும் லீலையையும் ஆதிசங்கரரின் வரிகளில் ரசித்தோம். முழுவதும் பக்திப் பாதையிலே நம்மைக் கைபிடித்து அழைத்திச் சென்ற அந்த மகான், அடுத்து நம்மை வேறு ஒரு ஆன்மிகப் பாதையில் அழைத்துச் செல்கிறார். அது சற்று அச்சத்தைத் தரக்கூடியது. ஆனால் மிகவும் பயனுள்ளது.

*(தொடரும்)*

# இருப்பது ரமணன் ஒன்றே

**வித்யாசங்கர்**

*உனக்கு நிகர் யாருமில்லையே ரமணா*
*உனக்கு நிகர் யாருமில்லையே*

***(உனக்கு)***

*நான் என்று எழுவது கானல் நீரே*
*நீக்கமற நிறைந்து நிற்பதும் நீயே*

***(உனக்கு)***

*நான் எனதென்று பாழினில் திரிந்தேன்*
*இருப்பது நீயே என்றும் அறிந்தேன்*
*நின் பதமருளாலே உன்னில் தெளிந்தேன்*
*அறிந்தவன் நானும் நின் பதத்தில் கரைந்தேன்*

***(உனக்கு)***

# ரமண புராணம்

## ஆகுரா

### ரமண புராணம் வரிகள் (105– 118)

துதித்தலும் போற்றுதலும்

துதிப்போர்க்கு வல்வினை போகும். ஆழ்ந்த துன்பம் (அகந்தை) போகும். ரமணன் அருள் கைகூடும். வாழ்த்துனரை வானோர்கள் வாழ்த்துவர்.

வழுத்தி வணங்குபவரின் பிறவித்துன்பம் நீங்கும். இனி வரும் அடிகள் மற்றும் அன்றி இடை இடையே ரமண புராணத்தில் சிவரமணனை வாழ்த்துதல் இடம் பெறுவதைக் காணலாம். ஆன்ம சாதனைகளிலேயே சிறந்த சாதனை, போற்றுதலும், துதித்தலும் ஆகும். இது போற்றி புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆதல்.

*இடைக்கலமாய் அன்பர் உயிர் ஏங்கி அழியாது அவ்*
*அடைக்கலம் நாளும் புரக்கும் அண்ணல் அருள் வாழ்க (106)*

*உயிர்க்கு உறுகண் செய்ய ஒருப்படாச்செம்மை*
*இயற்கு ஒரு கண்ணாய் இலகும் எந்தை அருள் வாழ்க (108)*

*அறம் தவறாச் சிந்தை சேர் அந்தணர்க்கு அண்ணிக்கும்*
*சிறந்த பரானந்தச் செழும் கழலோன் சீர் வாழ்க (110)*

*அன்பகத்து நாளும் அகலாது இனிது உறைந்து*
*துன்பகற்றும் இன்பத் துணைவன் அடித் தூள் வாழ்க (112)*

*சந்நிதியாய் எங்கும் தலை வணங்கும் தாழ்மையால்*
*என்னது யான் அற்றோர்கட்கு எய்ப்பில் வைப்போன் தாள்*
*வாழ்க (114)*

*போது அவப்போதாய்க் கணமும் போதலறப் புந்தி செய்து*
*மாதவப்பேர் ஏந்தன் மகிழும் மலர்த்தாள் வாழ்க (116)*

*ஓயாது உளறுவேன் உள்ளம் அருள் வெள்ளமாய்*
*வாயை அடைப்பித்த வல்லாளன் சீர் வாழ்க (118)*

## ஆன்மாவும் உயிர் அகந்தையும்

ஆன்மா எண்ணங்களுக்கு எட்டாதது. தனக்கு அயலாக இரண்டாவது என்று எதுவுமே இல்லாதது. அதனால் எல்லையற்றது. போவதற்கும் வருவதற்கும் அந்நியமான ஒரு புள்ளிகூட இல்லாதது. எனவே போக்குவரவு இல்லாதது, சலனம் இல்லாத அசலம். எனவே நேரத்திற்கு அப்பாற்பட்டது. அதனின்று அகந்தை என்பதாக இரண்டான ஒன்று உதிக்கிறது. அகந்தையின் உருவம் உடல். அகந்தை உடல் இன்றி இருக்காது.

உயிர் என்பது பிறப்பு, உயிர் அகந்தையே உடல் கொண்ட பிறப்பு. உயிர் அகந்தை ஒருவுடல் போயின் மற்றுமொரு உடல் எடுக்கும். இவை அனைத்தும் ஏகனாகிய ஆன்மாவினின்று உதித்து பலவாகின்றன. உண்மையில் இவை அனைத்தும் தோன்றி மறையும் தன்மையது. இதுவே மாயா அகந்தை. உடல் நான் என்று கருதும் உயிர்கள் ஜீவன்கள் எனப்படும். இந்த ஜீவ உயிர்கள் உடல் சார்ந்து நான்,எனது, நான் செய்கிறேன் என்று அகந்தை வயப்பட்டு தனது உண்மை நிலை இரண்டற்ற பரம ஆன்ம நிலை என்று உணர்வதில்லை. ஜீவர்களின் அகந்தை என்பது புத்தியும், முயற்சியும் ஆகும். புத்தியும் முயற்சியும் ஒடுங்கும் அந்தக் கணத்திலேயே அகந்தை எனும் மாயத் தோற்றம் விலகி ஆன்மா விளங்கும். ஜீவ உயிர்கள் எழு பிறப்பு நான்கு யோனிகளின் வாயிலாக 84 லட்சம் உயிர்களாக ஜனனம் மரணம் மீண்டும் ஜனனம் என்னும் சுழலில் சிக்கித் தவிக்கின்றன.

இவ்வேகச் சுழற்சி நிலை பெற்று, ஜீவர்களின் உயிர் அகந்தை போய், தனது உண்மை நிலை உணரப்படும் (உணரப்பட வேண்டும்). அனேகன் ஏகனாக உணரப்படும். ஜீவன் தனது ஏதாவது ஒரு பிறவியில் பிறப்பு இறப்பு சுழற்சியில், இருந்து விடுபடவேண்டும்

என்ற எண்ணம் உதித்த விவேகி ஆகிறான். இவன் தனது முயற்சி புத்தி கொண்டு ஆன்ம நிலை உணர முயல்கிறான். முயற்சி அகந்தையின் அங்கமே ஆதலால், நான் செய்கிறேன் என்ற பாவம் கொண்டது.

ஜீவன் தானாகவே ஆன்ம ஒளியில் கலக்க முடிவதில்லை. உதித்த இடத்தில் ஒடுங்க ஆன்மாவின் அருள் (ஞான குரு வடிவில்) வேண்டியுள்ளது. ஜீவன் தனது இயலாமையினால் குருவின் அருள் வேண்டி கதறி அழுகின்றான். அந்நிலையில் குரு அடைக்கலம் அருளி ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியம் முற்றுப்பெறும்.

இடைக்கலமாய் அன்பர் உயிர் ஏங்கி அழியாது அவ்
அடைக்கலம் நாளும் புரக்கும் அண்ணல் அருள் வாழ்க (106)

**பதவுரை:**

புரக்கும் – காக்கும்; புரக்கும் அண்ணல். காக்கும் என் காவலனே காண்பரியப் பேரொளியே என்னும் சிவபுராணத்து வரிகள் நினைவு கூறலாம்.

**விளக்கம்:**

இடைக்கலமாய் அன்பர்கள் உயிர் ஏங்கி அழிந்து மீண்டும் பிறப்பு இறப்பு சுழலில் அகப்பட்டு விடாது அடைக்கலத்தை நாளும், அருளி காக்கும் காவலனாகிய குரு ரமணா நின் அருள் வாழ்க.

**இடைக்கலம் என்றால் என்ன?**

‘கலம்’ என்னும் சொல் அடைவேறு பாட்டாற் பொருள் வேறுபடநிற்கும். அடைக்கலம், அணிகலம், அருங்கலம், இடுங்கலம், இலைக்கலம், ஒற்றிக்கலம், சேமக்கலம், படிமக்கலம், பரிகலம், மரக்கலம் முதலியவற்றை நோக்குக. கலம் பல பொருள் கொண்ட ஒரு சொல்.

**இடைக்கலமாய் அன்பர் உயிர் ஏங்கி அழியாது**

ஜீவ உயிர்கள் பிறவிச் சுழலில் இருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணமே இல்லாது இருத்தல்

ஒரு நிலை. உயிர்கள் தாங்கள் உதித்த இடமாகிய ஆன்மாவைச் சேர்தல் என்னும் நிலை, அது அடைக்கலம் எனப்படும். இவை இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை,அடைக்கலத்திற்கு முன்பாய ஒரு இடை நிலை இடைக்கலம் என்பதாகும். அடைக்கலம் வேண்டுபவர் தன்னை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்று பிடிவாதமாக தவித்தாலும் அடைக்கலம் தருபவர் விரும்பி ஏற்றுக் கொண்டால் தான் அடைக்கலம் முற்றுப்பெறும். ஏற்றுக் கொள்பவரின் மனநிலை உறுதியாகத் தெரியாத பொழுது அடைக்கலமாக தம்மைத் தருபவர் பிடிவாதம் பிடித்தலுமுண்டு. "சேராய் எனின் மெய் நீராய் உருகிக் கண்ணீராற் அழிவேன் அருணாசலா" என்னும் அருணாசல அக்ஷரமணமாலையில் ஸ்ரீ ரமணர் அருளி உள்ளது நினைவு கூர்க.

"படைக்கலமாக" என்று தொடங்கும் நாவரசரின் விருத்தப் பாடலை நோக்குவோம்.

"படைக்கலமாக உன் நாமத்து எழுத்து அஞ்சு என் நாவில் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்கு ஆட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் து நீறு அணிந்து உன்
அடைக்கலம் கண்டாய் அணி தில்லைச் சிற்றம்பலத்து அரனே. (திருமுறை: 4818)

ஐயனே நின் ஐந்தெழுத்துச் சொல் என் நாவில், என்னைக் காக்கும் படைக்கலம். நின் அருளால். புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின் மலரடி என்மனத்தே நழுவாது. இடைக்கலமாய் நில்லாது எழுபிறப்பும் உனக்கு தொண்டு செய்வேன். அடைக்கலம் அருள்வாய். ஆம் அடைக்கலம் என்பது அருளுவதே. பூரண சரணாகதி என்பது.

இதை ஜீவன் செய்வதில்லை, ஆன்மா அருளுவது தான் பூரண சரணாகதி. நான் சரணாகதி செய்கிறேன்

என்பதில் அகந்தை தொக்கி நிற்கிறது. எனவே பூரணம் ஆவது அடைக்கலம் அருளுவதால் தான். பகவான் ரமணர் அருணாசலனைப் பார்த்தது “ஆவி உடல் (உயிர் அகந்தை) கொண்டாய் எனக்கோர் குறைவுண்டோ” என்று பாடுகிறார். ஆவி உடல் கொடுத்தேன் என்று கூறவில்லை.

உயிர்க்கு உறுகண் செய்ய ஒருப்படாச்செம்மை
இயற்கு ஒரு கண்ணாய் இலகும் எந்தை அருள் வாழ்க (108)

பதவுரை:

உறுகண் = துன்பம், ஊறு

ஒருப்படாச்செம்மை = ஒருப்படா ஒத்துப் போகாமை, பொருந்துதல் இன்மை, செம்மை செழிப்பு சிறப்பு

இயற்கு ஒரு கண்ணாய் இலகும் = இயல்புக்கு ஆதாரமாய் எளிதில் விளங்கும்

விளக்கம்:

உயிர்களுக்கு துன்பம் கொடுத்தல் என்னும் செயலுக்கு ஒத்துப்போகாத சிறப்பான இயல்புடையவன் என் தந்தையான ரமணன்.

இந்த என் தந்தையின் சிறப்பு இயல்புக்கு ஆதாரமாக எளிதில் விளங்குவது அவனது அருள். என் தந்தையின் அந்த அருள் வாழ்க

அறந்தவராச் சிந்தை சேர் அந்தணர்க்கு அண்ணிக்கும்
சிறந்த பரானந்தச் செழுங்கழலோன் சீர் வாழ்க (110)

பதவுரை:

அறம் = ஞானம், தெளிவு, அன்பும் அருளும் கொண்டது, நேர்மை, நற்செயல்கள்.

அந்தணர் = அறவோர், அறம் தவறா சிந்தையர்

அண்ணித்தல் =அணுகி அருள் புரிதல், நெருங்கி அருள் புரிதல், இனித்தல்

பரானந்தம் = மனதின் அழிவு ஏற்பட்டு, சுயத்தின் மீது கவனம் நிலைக்கும்போது ஏற்படும் நிலையான ஆனந்தம். பரம என்றால் உயர்ந்த சிறந்த பேரானந்தம் பரானந்தம் எனப்படும்.

செழும் = செழு என்றால் சிறப்பு, அழகு வளமை அல்லது பொலிவு எனப் பொருள்.

*கழல் = வீரர்கள் அணியும் கால் அணிகலன் அல்லது வீர தண்டை; சீர் = பெருமை, அழகு, இயல்பு.*

**விளக்கம்:**

*அறம் தவறா சிந்தை கொண்ட அறவோர் ஆகிய அந்தணர்க்கு அணிமையில் அணுகி அருள் புரிவோன் குரு ரமணன். சிறந்த உயர்ந்த பேரானந்தத்தில் திளைக்கும் வீர தண்டைகளை அணிந்த அந்த ரமணனின் இயல்பு வாழ்க.*

*அன்பகத்து நாளும் அகலாது இனிது உறைந்து*
*துன்பகற்றும் இன்பத் துணைவனடித் தூள் வாழ்க (112)*

**பதவுரை:**

*அன்பகத்து = அன்பு பூண்ட அன்பர் இதயத்தில் நாளும்*
*அகலாது = என்றும் அகலாது,*
*இனிது உறைந்து = இன்பமயமாக இருத்தல்*
*அடித் தூள் = பாத தூசிகள்*

**விளக்கம்:**

*அன்புடைய அடியவர்கள் உள்ளத்து என்றும் நீங்காது இன்பமயனாக நிலைபெற்று உறைபவன் ரமணன். அந்த ரமணன் அடியாரின் துன்பம் (அகந்தை) அகற்றுபவன். இன்பத்தை (ஆத்ம நிலை) அடைய துணை நிற்பவன். அந்த இறைவனின் அடித்துகள்கள் வாழ்க!*

*சந்நிதியாய் எங்கும் தலை வணங்கும் தாழ்மையால்*
*என்னது யான் அற்றோர்கட் கெய்ப்பில் வைப்போன் தாள்*
*வாழ்க (114)*

**பதவுரை:**

*சந்நிதியாய் எங்கும் = எத்திசையிலும் எங்கும் ரமண சந்நிதியே என்பதாக*

*என்னது யான் அற்றோர்கள் = நான், எனது என்னும் அகந்தை இல்லாதவர்*

*எய்ப்பில் வைப்பு = "எய்ப்பில் வைப்பு" என்றால் தளர்ச்சி அல்லது இளைப்பு வரும்போது பயன்படுத்த, முன்கூட்டியே சேமித்து வைக்கும் பொருள் என்று பொருள்.*

***விளக்கம்:***

*எங்கும் குரு சந்நிதியே அன்றி வேறு இல்லை என்று தாழ்மையினால் தலை வணங்கும் தன்மையினால் ஜீவர்களுக்கு நான் எனது என்னும் பொய் உணர்வு இல்லாது போகும். அத்தகைய அகந்தை இல்லாது போனவர்களுக்கு சேமித்து வைத்த மா நிதியாக தோன்றுபவன் குரு ரமணன். அத்தகைய குரு ரமணன் தாள் வாழ்க.*

*தளர்வினில் எய்ப்பில் வைப்போன்*

*அடி முடி என்னும் எல்லைகள் அற்றது எல்லையற்ற பரம்பொருளான ஆன்ம ஒளி. நான் எனது என்ற ஒரு எல்லைக்குள் இருந்து கொண்டு ஜீவன் தன் முயற்சியாலும், புத்தி கூர்மையினாலும் ஆன்ம ஒளியைக் காண விழைகிறான். அத்தகைய முயற்சி தோல்வியில் முடியும் போது இயலாமையினால் தளர்வுறுகிறான். பகவான் "என் தளர்வினுக்கு அழிவு நாடிடுவாய்", என்று அருணாசலனை நோக்கி அருணாசல பதிகத்தில் வேண்டுவது இங்கு நினைவு கூறத்தக்கது.*

*மேலும் அருணாசல தத்துவமாக ரமண அடியார் முருகனார்,*

*"புத்தி அகங்காரம் புலம்பு எய்த ஓங்கும்*
*மத்தி இதயம்தான் மறையவனும் மாலும்*
*நத்த அறியாது நலம் குலைய அன்னார்*
*மத்தி ஒளிர் அண்ணாமலையினது மெய்யே"*

*என்று பாடியுள்ளார்.*

*இயலாமையினால் சோர்வு அடையும்போது அகந்தை முற்றிலும் அழிந்து விடுகிறது அத்தகைய தேடுதல் ஓய்ந்த நிலையில் ஆன்மா தன்னுள் ஒளிர்கிறது.*

*"தேடாது உற்ற நல் திருவருள் நிதி" வைப்பாக அருளப்படுகிறது.*

மாணிக்கவாசகரும் இறைவனை, “காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க” (திருவண்டப்பகுதி, 105) என்கிறார். “வைத்த மாநிதி” என்பது இறைவன் திருப்பெயர்களுள் ஒன்று.

போது அவப்போதாய்க் கணமும் போதலறப் புந்தி செய்து
மாதவப்பேர் ஏந்தன் மகிழும் மலர்த்தாள் வாழ்க.

பதவுரை:

அவப் போது = அவ பொழுது, வீண் பொழுது, போதல்
அற = போகாது, செல்லுதல் அல்லாது புந்தி அறிவு, மனம்
புந்தி செய்து = மனத்தில் வைத்தல்.
மா தவம் = பெரிய தவம். தவம் என்றால் ஆன்மீக முன்னேற்றத்திற்காக உடலாலும், வாக்காலும், மனதாலும் செய்யப்படும் அனைத்து சாத்வீகமான சாதனைகள் ஆகும்.
கணம் = மிகக் குறுகிய கால அளவு.
மாதவப்பேர் = மா தவம் செய்தவர்கள்
ஏந்தன் = தாங்குபவன், ஏந்துபவன்

விளக்கம்:

ஒரு குறுகிய கால அளவுகூட காலம் வீண் ஆகாது நிலையாக மனதை சுத்தமாக நிறுத்துபவர் மகா தவ யோகிகள் ஆவர். அத்தகைய திடமான சுத்த மனதில் தனது மலர்த்தாளை குரு ரமணன் வைக்க, அதைத் தாங்கி நிலை நிறுத்திக் கொண்டு மகிழ்வர் மா தவத்தினர். அவர்களை மகிழ்விக்கும் அந்த மலர்த் தாள் வாழ்க!

புந்தி செய்து, மாதவப்பேர் ஏந்தன் மலர்த்தாள்

எல்லா ஜீவராசிகளின் மனதிலும் சென்று இயைந்தும், வெளிப்பட்டும் நிற்கும் இயல்புடையது இறைவனின் மலர்த்தாள். அடியார்களுடைய புந்திக்குள் செல்வதில் தாளுக்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லை. பிரச்சினை யெல்லாம் நம்முடைய புந்தியில்தான். பலருடைய புந்தி அடிப்பாகமில்லாத ஓட்டையான பாத்திரம் போன்றது.

மேலும் பலருடைய புந்தி மாறிக் கொண்டே யிருக்கிறது. அடிப்பாகம் இல்லாமலும், வடிவு மாறிக்

கொண்டும் இருக்கின்ற பாத்திரத்தைப் போன்ற புந்தியில், தாளை எப்படி வைப்பது? இறைவன் தன் தாளை உடையவன் புந்தியுள் தாளை நுழைக்க எப்பொழுதும் தயாராக உள்ளான். புந்தியை உடையவர்களாகிய நாம் என்ன செய்யவேண்டும்? முதலில் புந்திக்கு ஒரு அடிப்பாகம் இட்டு உள்ளே நுழைந்த பொருள் வெளியே போய்விடாமல் இருக்கச் செய்யவேண்டும். அடுத்த படியாக விநாடிக்கு விநாடி மாறிவரும் அதன் வடிவைச் செப்பஞ்செய்து ஒரே வடிவுடன் இருக்குமாறு செய்ய வேண்டும். இவ்வாறு செய்துவிட்டால் உள்ளே சென்ற திருவடி அங்கேயே தங்கிவிடும். இந்த முழுப்பணியையும் செய்ய வேண்டியது புந்தியைப் பெற்றுள்ள நம்முடைய பணி. இங்கு மா தவ ச்ரேஷ்டர்கள் குரு ரமண திருவடிகளை மனதில் தவறவிடாமல் தேக்கி நிலை நிறுத்தி வைத்து மகிழ்வர். அத்தகைய குரு ரமண மலர்த்தாள் வாழ்க!

நினைவிற்கு:

"புகழ்மின் தொழுமின் பூப் புனைமின் புயங்கன் தாளே
புந்திவைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லலையும் இனியோர்
இடையூறடையாமே,"
– திருவாசகம், யாத்திரைப் பத்து

ஓயாது உளறுவேன் உள்ளம் அருள் வெள்ளமாய்
வாயை அடைப்பித்த வல்லாளன் சீர் வாழ்க (116)

விளக்கம்: ஓயாது எதையாவது பிதற்றிக்கொண்டு அலையும் மனம் கொண்டவன் நான். சதா சலித்துக் கொண்டுள்ள என் மனதின் ஓலத்தை நிறுத்தி தூய்மை ஆக்கி, உனது ஆன்ம அருள் வெள்ளத்தை நிரப்பிய வல்லமை கொண்ட குரு ரமணனே, நின் புகழ் வாழ்க!

மேலும் மேலும் வளரும் அவன் அருள் தாங்கி நிற்க



# வீணாம் நினைவே துன்பம்

**D. தியாகராஜன்**

பொதுவாக, மனிதர்கள் தங்கள் வாழ்வில் இழந்தவை, துக்கங்கள், துரோகங்கள் போன்ற கடந்த கால நினைவுகளைத் திரும்பத் திரும்ப நினைத்து வருந்துகின்றனர். இந்த நினைவுகளே அவர்களை அதிகமாகப் பாதிக்கின்றன. இதனால் எந்தப் பயனும் இல்லை என்று தெரிந்தும், அந்த நினைவுகளிலேயே சிக்கித் துன்பப்படுகின்றனர்.

மேலும், எதிர்காலத்தைப் பற்றிய நினைவுகளைக் கற்பனை செய்து, அதனால் குழப்பம் அடைகின்றனர். நடக்கவிருக்கும் ஒரு விஷயத்தை பல்வேறு நிகழ்தகவு சாத்தியக்கூறுகளுடன் (probability) கற்பனை செய்து, இப்படி ஆகுமோ, அப்படி ஆகுமோ என்று எண்ணித் தவிக்கின்றனர்.

கடந்த காலம் மற்றும் எதிர்காலம் பற்றிய நினைவுகள் எந்தப் பயனையும் தருவதில்லை. நிகழ்காலத்தில் நடப்பதை ஏற்றுக்கொண்டு, எது நடந்தாலும் அது இறைவனின் செயல் என்று மனப்பக்குவம் அடைய வேண்டும். இதுவே நமக்குத் தேவை.

*The past is history, the future a mystery, and the present the only reality. That's why it's called 'the present'a gift.* என்று ஆங்கிலத்திலும் ஒரு அறிஞர் இவ்வாறு மொழிகிறார். எக்கார்ட் டோலிஸ் நூல் *'The Power of Now'* என்பதும் இதையே கூறுகிறது.

நமது வேதங்களும், புராணங்களும், ஞானிகளும் இதைத்தான் உபதேசித்துள்ளனர். அவதார புருஷரான ஸ்ரீ ராமரின் வாழ்க்கையும் இதைத்தான் உணர்த்துகிறது.

ரமண மகரிஷிகளின் வாழ்வில் நடந்த அனைத்து நிகழ்வுகளும் எத்தகைய முன்னேற்பாடும் இல்லாமல், எதிர்பாராமல் நடந்தவையே. மரண அனுபவம், அருணாசல விஜயம், மலைமீது பல இடங்களில் வசித்தது, அன்னையின் வருகை, அன்னை முக்தி, ஆலயம் அமைந்தது, ஸ்ரீ ரமணாஸ்ரமம் உருவானது, பகவான் அருளிய பாடல்கள் என அனைத்தும் எந்தத் திட்டமிடலும் இல்லாமல் நடந்தவை. பகவான் தனது தேகம் நோயுற்றபோதும் உடல் வேதனை அல்லது நோயைப் பற்றிய எவ்வித சிந்தனையோ இன்றி அதை அப்படியே ஏற்றுக்கொண்டார்.

பகவத் கீதை மனதை கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. மனதை கட்டுப்படுத்துவது கடினம் என்றாலும், தொடர்ச்சியான பயிற்சி மற்றும் பற்றின்மை மூலம் அதை சாதிக்க முடியும் என்று கூறுகிறது.

“சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம்!
தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்!!”
(பகவத் கீதை 6.34)

“அஸம்ஸயம் மஹாபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம்!
அப்யாஸேந து கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே”
(பகவத் கீதை 6.35)

மனதை கட்டுப்படுத்துவது காற்றை கட்டுப்படுத்துவது போல் கடினமானது தொடர்ச்சியான பயிற்சி மற்றும் பற்றின்மை மூலம் சாத்தியமாகும் என்று இவ்விரு கீதை சுலோகங்களும் கூறுகின்றன.

உலக இன்பங்களின் மீதான பற்றை கைவிடுவது, தேவையற்ற எண்ணங்களை தவிர்ப்பதற்கு முக்கியமானது. பற்றின்மையின் மூலமாக மனதை ஒருமுகபடுத்தி அமைதி பெறலாம். தியானம் மனதை ஒருமுகப்படுத்தவும், தேவையற்ற எண்ணங்களை தவிர்க்கவும் உதவும். கடவுள் மீது பக்தி செலுத்துவதும்

மனதைத் தூய்மைப்படுத்தவும், தேவையற்ற எண்ணங்களை தவிர்க்கவும் உதவும்.

எண்ணங்களைக் கட்டுப்படுத்தி மன அமைதியைப் பெற ரமண மகரிஷிகளின் உபதேசங்கள் வாயிலாகவும் வாழ்ந்தும் சிறந்த வழிகாட்டியுள்ளார்.

நான் யார்? என்ற சுய விசாரணையே எண்ணங்களின் மூலத்தை கண்டறியும் வழி. இந்த விசாரணை மனதை அதன் மூலத்திற்கு கொண்டு சென்று எண்ண ஓட்டத்தை குறைக்கிறது. மன அமைதியே எண்ணங்களை கட்டுப்படுத்த சிறந்த கருவி. தியானம், மன ஒருமைப்பாடு மற்றும் மௌனம் ஆகியவை மன அமைதியைத் தரும். மௌனம் எண்ணங்களின் ஆதிக்கத்தை குறைத்து மனதை அமைதிப்படுத்தும்.

எண்ணங்களைத் தொடராமல், சாட்சி பாவத்தில் ஆழ்ந்து கவனிப்பதன் மூலம் அவற்றின் மீதான பற்று படிப்படியாய் குறையும். நான் யார்? என்பதை உணர்வதே சுய உணர்வு. எண்ணங்கள் மனதின் இயக்கத்தின் விளைவு. அவை நிலையற்றவை, தோன்றி மறையும் தன்மை கொண்டவை. எண்ணங்களுக்கு அடிமையாகாமல் சாட்சியாக இருக்க வேண்டும்.

எண்ணங்கள் செயல்களாக மாறும். நல்ல எண்ணங்கள் நல்ல விளைவுகளையும், கெட்ட எண்ணங்கள் கெட்ட விளைவுகளையும் ஏற்படுத்தும். மனதை தூய்மையாக வைத்துக்கொள்வது அவசியம்.

தாயுமானவரின் கீழ்க்கண்ட பாடலில் எண்ணங்கள் படுத்தும் பாட்டினையும் மனமடக்கத்தைப் பற்றியும் இவ்வாறு விவரிக்கின்றார்.

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே. 35.

மனதில் எண்ணங்கள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன. எண்ணங்களுக்கு ஒரு முடிவே இல்லாமல்,

பல விதமாக மாறிக்கொண்டே இருக்கின்றன. இந்த எண்ணங்களின் நிலையற்ற தன்மையால் மனம் அலைபாய்கிறது. இறைவா இது போதும்.

சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே.169.

ஒருவர் கோபத்தை அடக்கக் கற்றாலும், பல்வேறு சித்திகளைப் பெற்றாலும், மனதை அடக்கத் தவறினால், அதனால் எந்தப் பயனும் இல்லை.

பகவான் ரமண மகரிஷிகளிடம் துன்பத்தை ஒழிப்பதெப்படி என அன்பர்கள் வினவியதற்கு பகவான் அளித்த விடைகளை வசனாம்ருத நூலில் உள்ள கீழ்க்கண்ட உரையாடல் வாயிலாகக் காண்போம்:

கேள்வி: துன்பத்தை ஒழிப்பதெப்படி?

பகவான்: வீணாம் நினைப்பே துன்பம். அதைத் தவிர, துன்பமென்று ஒன்று எங்கேயுள்ளது? அதைத் தவிர்க்கும் பலம் மனத்திற்கில்லை.

கேள்வி: அத்தகைய பலத்தைப் பெறுவதெப்படி?

பகவான்: கடவுள் வழிபாட்டால்

கேள்வி: அனைத்தினுள்ளும் கடவுள் இருக்கிறாரென்பதைப் புரிந்து கொள்வதே சிரமமாயிருக்கிறது.

பகவான்: அப்படியெனில் கடவுளை விட்டுவிடு. உன்னையே நீ பிடித்துக் கொள்.

கேள்வி: மந்திர ஜபம் புரிவதெப்படி?

பகவான்: மந்த்ர ஜபம் ஸ்தூலம், சூக்ஷ்மமென இருவகைப்படும். சூக்ஷ்ம ஜபமென்பது மானசிகம். அதனால் மனம் திடப்படும்.

சத்தங் களுக்குந் தருக்கங் களுக்குநின்
புத்தி தனையடிமை போக்காதே சுத்தக்

*கருத்தா லகம்புக்குக் கற்பனைதீர்ந் துன்மெய்*
*யுருத்தனையோர்ந் துண்மை யுணர்*

*(526 குருவாசகக் கோவை)*

*வாக் ஜாலங்களுக்கும் ஜயாபஜயமான தோஷங்கள் நிறைந்த தருக்கங்களுக்கும் தன் புத்தியை அடிமை யாக்கினவன் ஒருக்காலம் மனச்சாந்தியும் ஆத்மாநுபவமும் பெறான். நமது மெய்யுரு கற்பனையைக் கடந்து நிற்பதால், மனச் சேஷ்டை யாவும் அடங்குவதே நம் குறியாம்.*

*என்று குருவாசகக் கோவையும் பறைசாற்றுகின்றன.*

*மனம் அமைதி பெறவும் தியானம் செய்வது எப்படி என்றும் வினவிய அன்பர்களது கேள்விக்கு பகவான் அளித்த விடைகளை கீழ்க்கண்ட உரையாடல்கள் (வசனாம்ருதம்) வாயிலாக காண்போம்:*

*கே: மனவமைதியில்லை. தியானம் செய்வது எப்படி?*

*ப: அமைதியே நம் யதார்த்த சுபாவம். ஆதலின் அதைப் புதிதாய் அடையவேண்டாம். அதை மறைத்து உபத்திரவிக்கும் எண்ணங்களையே ஒழிக்க வேண்டும்.*

*கே: எண்ணங்களை ஒழிக்க நான் செய்யும் முயற்சி பலிக்கவில்லை.*

*ப: அதற்கு கீதை சொல்லும் வழியொன்றே. எவ்வெப்போது மனம் சிதறுகின்றதோ அவ்வப்போது அதனை அவ்விக்ஷேபத் தினின்று திருப்பி மூலமாம் தன்னிலையிற் சேர்ப்பிக்க வேண்டும்.*

*கே: அவ்வாறு மனத்தைத் திருப்பித் தியானிக்க என்னால் முடியவில்லை.*

*இதனிடையே சந்நிதியிலிருந்த அன்பர் ஒருவர் அங்கும் இங்கும் அஅலந்துகொண்டிருக்கும் யானையின் துதிக்கையில் ஒரு சங்கிலியைக் கொடுத்தால் அலைச்சல்*

நின்றுவிடும். அவ்வாறே குறித்ததோர் லக்ஷியமில்லா மனம் அலைகிறது; ஏதோவோர் லக்ஷ்யத்தைக் கொண்டால் அது அமைதியுறுகின்றது என்னும் பகவதுபதேசத்தைக் குறிப்பிட்டார்.

கே: அதெல்லாம் வெறும் வார்த்தை, மனத்தையாவது அடக்குவதாவது! அது அசாத்தியம்.

ப: மனம் குவிய வொட்டாதபடி தடுப்பது வாசனைகளே. அவை பக்திக்கும் பிரதிபந்தமாம். அப்யாஸத்தாலும் வைராக்யத்தாலும் வாசனைகனை ஒழிக்கவேண்டும்.

கே: ஆம். வைராக்கியமில்லாமல் எதுவும் நடவாது.

ப: அப்யாஸம், வைராக்யம் இரண்டுமே வேண்டும். மனம் சிதறிப்போகாது தடுப்பது வைராக்யம். ஒன்றிலேயே மனத்தை நிறுத்தல் அப்யாஸம். வேண்டாததைத் தவிர்த்தல் வைராக்யம்; வேண்டப்படும் லக்ஷ்யத்தில் அதனை நிறுத்தல் அப்யாஸம்.

கே: என் முயற்சி யொன்றாலேயே மனத்தை நில நிறுத்த முடியவில்லை. அதனினும் திறன்மிக்கதோர் ஆற்றலின் அவசியத்தை உணர்கிறேன்.

ப : ஆம். ஆம். அதுதான் அருளெனப்படுவது. மனம் பலவீனமானது. ஆதலால் அதன் தனி முயற்சியால் ஏதும் நடப்பதில்லை. அருளில்லாமல் எதுவும் நடவாது. ஸத்ஸங்கமும், சாதுக்கள் சேவையும் அதற்காகவே ஏற்பட்டன. ஆயினும், புதிதாய் ஏதோவொன்றை அடைதல் என்பதில்லை. பலவீனமான மனிதன் திடமிக்க சாதுக்களின் கூட்டுறவால் தன்னிலை நிற்பதற்கு வேண்டிய பலத்தைப் பெறுகிறான். இருப்பது அருளொன்றே. அதற்கயல் எதுவுமில்லை.

கே: பகவானது பரிபூரண அனுக்ரகத்தை வேண்டுகிறேன்.

ப: ஆம். ஆம். (என்று அருளுடன் அவரைப் பார்த்தார்).

தேவன் ஒருவனே அது உனக்குள் இருக்கும் ஆத்மா தான் என்று கீழ்க்கண்ட உள்ளது நாற்பது அனுபந்தப் பாடல்களிலும் வலியுறுத்துகிறார்.

தேவனா ரார்மனந் தேருவ னென்மன
மாவியா மென்னா லறிபடுமே தேவனீ
யாகுமே யாகையா லார்க்குஞ் சுருதியா
லேகனாந் தேவனே யென்று. (உ.நா. அனுபந்தம் 6)

கேள்வி: இறைவன் என்று சொல்லப்படுபவன் யார்?

பதில்: எவனால் மனம் அறியப்படுகிறதோ (எவன் மனதை அறிகின்றானோ) அவன்தான் தேவன்.

கேள்வி: ஆகையினால் இறைவனாகிய தேவன் நீயேதான். ஏனெனில் தேவன் ஒருவனே என்று சுருதிகள் கோஷிக்கின்றன.

ஒளியுனக் கெதுபக லினனெனக் கிருள்விளக்
கொளியுண ரொளியெது கணதுண ரொளியெது
வொளிமதி மதியுண ரொளியெது வதுவக
மொளிதனி லொளியுநீ யெனகுரு வகமதே.

(உ.நா அனுபந்தம் 7)

கேள்வி: உனக்குப் பிரகாசம் எது?

ப: பகலில் சூரியன், இருளில் விளக்கு.

கே: இந்தப் பிரகாசத்தை உணரக்கூடிய பிரகாசம் எது?

ப: கண்ணின் ஒளியினால் உணர்கிறேன்.

கே: கண்ணை உணர்கின்ற ஒளி எது?

ப: மதியின் ஒளியாகும்.

கே: மதியை உணர்கின்ற ஒளி எது?

ப: அது நான். ஆகவே எல்லா ஒளிகளிலும் அவற்றிற்கு ஒளியாவது நீ என்று குரு சொல்ல, 'நான் அதுவே' என்றான் சீடன்.

இன்றைய நவீன உலகில், நாம் பயன்படுத்தும் வாட்ஸ்அப், மின்னஞ்சல், கணினி போன்ற அனைத்து மின்னணு சாதனங்களிலும் தேவையற்ற தகவல்கள் அவற்றின் செயல்பாட்டை மெதுவாக்கி, செயலிழக்கச் செய்கின்றன. வாட்ஸ்அப்பில் வரும் தேவையற்ற செய்திகள் மற்றும் படங்கள் குறிப்பிட்ட நேரத்தில் தானாகவே அழிந்துவிடும் வசதிகள் உள்ளன. நம் கணினி மற்றும் மின்னஞ்சலில் கூட ஜங்க் எனப்படும் தேவையற்றவற்றை தானாகவே நீக்கும் வசதிகள் உள்ளன.

அதைப்போலவே, நம் மனதிலும் தேவையற்ற பழைய நினைவுகள் அல்லது குழப்பங்களை உருவாக்கும் புதிய எண்ணக் குப்பைகளை அவ்வப்போது ஆராய்ந்து நீக்கினால் மனம் அமைதியடையும்.

வானியல் ஆய்வு தொடங்கியபின் கடந்த 50 ஆண்டுகளாக ஏராளமான செயற்கைக் கோள்கள் வான்வெளியில் ஏவப்பட்டுள்ளன. அவற்றின் ஆயுள் சில ஆண்டுகளே. பின்னர் அவைகள் பயனற்றதாய் விண்வெளியில் சுற்றிக் கொண்டு இருக்கின்றன. அதுபோலவே நமது ஆழ் மனவெளியில் செயல் முடிவுற்ற பின்னரும் ஏராளமான பயனற்ற எண்ணக் கோள்கள் சுற்றிக் கொண்டு உள்ளன. அவற்றை உள்மனவெளியில் இருந்து நீக்குவது ஆத்ம சாதனை. இதுவே நமது வாழ்வின் நோக்கமாகும்.

**தக்ஷிணாமூர்த்தி தோத்திரம் தொடர்**
**அடுத்த இதழில் வெளிவரும்.**



# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### சின்ன சுவாமிகள் (சுவாமி நிரஞ்சனானந்தா)

*12/2/2025 ஆச்ரமத்தில் அமைந்துள்ள சின்ன சுவாமிகள் சமாதியில் அனுசரிக்கப்பட்டது. அவரது சமாதிக்கு அபிஷேக, அலங்காரங்கள் மற்றும் பூஜைகள் சிறப்பாக நடைபெற்றன.*

### சுந்தரம் ஐயர் ஆராதனை

*பகவான் ரமண மகரிஷிகளின் தந்தையார், சுந்தரம் ஐயர் அவர்களின் ஆராதனை தினம் 17/02/2025 திங்கட்கிழமையன்று, தாயார் சந்நிதியில் அனுசரிக்கப்பட்டது.*

### மஹா சிவராத்திரி

*முதல் லிங்கமாகிய அருணாசலம் என்ற பெரிய அற்புதமான சிவலிங்கத்தின் உருவத்தை ஈசன் மேற்கொண்ட புராதன நாள்*

*மார்கழி மாதத்தின் திருவாதிரை நாளாகும். அந்த அருணாசல ஜோதி ஸ்தம்பத்திலிருந்து மூர்த்தி ரூபமாக வெளிப்பட்ட சிவபிரானைத் திருமால் முதலான தேவர்கள் அனைவரும் போற்றி வழிபட்ட நாள் மாசி மாதத்து (கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி தினமான) மகா சிவராத்திரி தினமாகும்.*

*மஹா சிவராத்திரியை முன்னிட்டு ஸ்ரீ ரமணாச்ரமத்தில் 26/02/2025 அன்று மாலை மாலை 6 மணி முதல் 27/02/2025 காலை 6 மணி வரை நான்கு கால பூஜைகள் சிறப்பாக நடைபெற்றன.*

*இதன் நேரடி ஒளிபரப்பும் செய்யப்பட்டு எண்ணற்ற அன்பர்கள் கண்ணுற்று பயன்பெற்றனர்.*

## ஸ்ரீ வித்யா ஹோமம்

*ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் ஸ்ரீ வித்யா ஹோமம் நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு 21/3/2025 அன்று இந்த ஹோமம் வெகு சிறப்பாக நடந்தேறியது.*

*காலை 7 மணிக்கு துவங்கி மாலை 3 மணி வரை பூஜைகள் நடந்தன. அதில் நவாவர்ண பூஜை, ஹோமம், சுமங்கலி பூஜை, கன்யா பூஜை, பூர்ணாஹூதி மற்றும் தீபாராதனை நடைபெற்ற பின்னர் கலசங்களில் தீர்த்தங்கள் கொண்டு செல்லப்பட்டு பகவான் மற்றும் தாயார் ஆலயங்களில் அபிஷேகங்கள் மற்றும் தீபாராதனைகள் நடைபெற்றன.*

*எல்லோருடைய இதயக் கமலங்களிலும் வாசம் பண்ணுகிற பர தேவதையினுடைய மேலான கிருபை வேண்டி, அவள் ஆராதிக்கப்பட்டால் பூரண சந்தோஷமடைந்து பக்தருடைய இருதயாகாசத்தில் விசார சூரியனாக உதயம் செய்கிறாள். ஆகையினால் ஆத்ம சொரூபிணியானவளும், சர்வ இருதய வாசனியும் சித்ரூபியும், சிவையும், பரமேசுவரியுமான திரிபுரையை சத்குரு மார்க்கமாக உள்ளத்தில் கபடமின்றி ஆராதனை செய்ய வேண்டும் என்று திரிபுரா ரகசியத்தில் சொல்லப்பட்டுள்ளது.*

*ஆச்ரம நிகழ்ச்சிகளின் அனைத்து காணொளிகளையும் ஆச்ரம YouTube Channel வாயிலாகக் காணலாம்.*

# ரமண கேந்திர செய்திகள்

## ஸ்ரீரமண கேந்திரம், மைலாப்பூர், சென்னை

## ஸ்ரீ ரமண ஆராதனைப் பெருவிழா

## 25-4-2024

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 75-ஆவது ஆராதனை சிறப்பு நிகழ்ச்சிகள்:*

**காலை:**

*06:00 மங்கல இசை*

*07:00 மஹன்யாசம், ஏகாதச ருத்ர ஜபம், அபிஷேகம்*

*10:00 ஸ்ரீ ரமண ஸஹஸ்ரநாம அர்ச்சனை*

*11:00 உள்ளது நாற்பது, அருணாசல அக்ஷர மணமாலை பாராயணம்*

*12:00 தீபாராதனை*

*அனைவருக்கும் அன்னப் பிரசாதம் அளிக்கப்படும்*

**மாலை:**

*04:00 பிரதோஷ பூஜை*

*06:45 ஸ்ரீ ரமணரின் திருவுருவம் தாங்கி மயிலை நான்மாட வீதிகளில் உலா*

*07:15 அருணாசல அக்ஷர மணமாலை கூட்டுப் பாராயணம்*

*அனைவரும் கலந்துகொண்டு இறையருள் பெற அழைக்கிறோம்.*

*நன்கொடைகள் 80 G IT சட்டப்படி விலக்குப் பெறும்.*

*காசோலை/Draft 'Ramana Kendra Trust' என்ற பெயரில் கொடுக்கவும்.*

## ரமணாலயம் (ஸ்ரீ ரமணாச்ரம நிர்வாகம்),

## குரோம்பேட்டை, சென்னை

# ஸ்ரீ ரமண ஆராதனைப் பெருவிழா

# 25-4-2024

**காலை:**

*07:30 நாத இசை*

*08:00 வேத முழக்கம், நூற்றியெட்டு ஸ்ரீ ரமண நாம பூஜை*

*09:30 ஸ்ரீ ரமண சந்நிதி முறை -*

*பக்க வாத்தியங்களுடன் பண்ணிசை வழங்குபவர் 'திருவாசக செந்நாவலர்' மயிலை சத்தகுருநாத ஓதுவார் சுவாமிகள்*

*11:00 அருணாசல அக்ஷரமணமாலை கூட்டுப் பாராயணம்*

*11:30 தீபாராதனை, கலந்து கொள்ளும் அன்பர்களுக்கு*

*சிறப்பு உணவுப் பிரசாதம்.*

*அன்பர்கள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டு ரமண அருள் பெருமாறு அன்போடு அழைக்கின்றோம்.*

## ஸ்ரீமுருகனார் மந்திரம், இராமநாதபுரம்

## ஸ்ரீ ரமண ஆராதனைப் பெருவிழா

## 25-4-2024

*ஸ்ரீரமணாச்ரமத்திற்குப் பாத்தியமான முருகனார் மந்திரத்தில் வழக்கம்போல் இவ்வாண்டும் பகவான் ரமணரின் 75-ஆவது ஆராதனை விழா சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. பகவான் அருளிய அக்ஷரமணமாலை கூட்டுப் பாராயணம் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டு ரமண அருள் பெருமாறு அன்போடு அழைக்கின்றோம்.*

## நூல் ஆய்வு

### 'ரமணா' இலங்கை ரமணாலயத்தின் பதிப்பு



*ரமணன் என்னும் பூஞ்சோலையில் பல நூற்றுக் கணக்கான மணம் வீசும் மலர்கள் மலர்ந்துள்ளன. ஒவ்வொன்றிற்கும் ஒரு தனி மணம். சமீப காலத்தில் மலர்ந்துள்ள, பகவானின் வாழ்வையும் உபதேசங்களையும் சற்றும் விடாது பதித்துள்ள அழகிய சிறு நூல் 'ரமணா' – இது இலங்கை ரமணாலயத்தின் கையடக்கப் பதிப்பு. முனைவர் ஜெயராஜன் மற்றும் க. மகேந்திரன் ஆகியோர் பகவான் வாழ்வையும், உபதேசங்களையும் தங்கச் சிற்பம் போன்று அழகுற வடித்துள்ளனர்.*

*பகவானின் வாழ்க்கை சரிதத்தை எடுத்துக் கூறும் நூல்கள் வழக்கமாக அவரது பிறப்பு நிகழ்ச்சியில் இருந்து துவங்குவார்கள். இந்நூல் பகவானின் வாழ்க்கையின் மிக முக்கியமான ஒரு பகுதியான பவழக் குன்றில் அதுவரை மௌனமாக இருந்த பால ரமணர், அவர் தாய் நிகழ்த்திய பாசப் போராட்டத்திற்கு விடையாய், தனது ஞான நிலைப்பாட்டினை தாயாருக்கு ரத்தினச் சுருக்கமாக எழுதிக் காண்பித்தார். இந்த விடையில் இருந்து துவங்குகிறார் இந்நூலாசிரியர்.*

*ரமணரின் இளமை, அருணாசல வாழ்க்கை, சேஷாத்திரி சுவாமிகளின் ஆன்மிக வழிகாட்டுதல், காவ்ய கண்டர் முதல் கீரைப்பாட்டி வரை அனைவருக்கும் உபதேசம், விருபாக்ஷ குகை, கந்தாஸ்ரமம் வாழ்க்கை, அன்னையின் மோட்சம், ஹம்ப்ரீஸ், பால்பிரண்டன், மேஜர் சாட்விக் போன்ற வெளிநாட்டு சீடர்களின் வருகை, ரமணாஸ்ரமம் என அவரது வாழ்க்கை மற்றும் உபதேசங்களை சிறப்பாகவும் சுருக்கமாகவும் தொகுத்துள்ளனர். ஆங்காங்கே தொடர்புடைய அழகிய புகைப்படங்கள் மேலும் சிறப்பு சேர்க்கின்றன.*

*ரமண வழி பின்பற்றும் அனைவர்க்கும் முக வாயிலாக இந்நூல் பயன்படும் என்பதில் ஐயமில்லை.*

*பேராசிரியர் லட்சுமி நாராயண் (1930 2025) தனது 95வது பிறந்த நாளினை குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் சூழ கொண்டாடிய சில நாட்களுக்குப் பிறகு அமைதியாக ரமண பதம் அடைந்தார். பகவான் ரமணரின் தீவிர பக்தரான இவர், மகரிஷிகளைப் பற்றி எண்ணற்ற சொற்பொழிவுகளை நிகழ்த்தியவர். 'ஃபேஸ் டு ஃபேஸ் வித் ரமண மஹரிஷி' என்ற நூலை தொகுத்தவர். ஸ்ரீ ரமண கேந்திரம், ஹைதராபாத்தின் உறுப்பினராகவும், 2007 முதல் 2017 வரை ஐதராபாத் கேந்திரத்தின் சஞ்சிகையான 'ஸ்ரீ ரமண ஜோதி'யின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.*

*உஸ்மானியா பல்கலைக்கழக எமரிட்டஸ் பேராசிரியர், லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் முனைவர், இந்திய அரசு ஒப்பந்த பணிக்குழு உறுப்பினர், ஹார்வர்ட் ஃபுல்பிரைட் அறிஞர், யுஜிசி தேசிய விரிவுரையாளர், 70 ஆண்டு கல்விப் பணி, பொது நிறுவன நூலாசிரியர், பல்கலைக்கழக/அரசு குழு பொறுப்பாளர் என இன்முகத்துடன் பன்முகப் பணியாற்றியவர்.*

*2025 பிப்ரவரி 24 அன்று ரமண பதம் அடைந்த இவர் ஐதராபாத் ரமண கேந்திரத்திற்கும் ரமண இலக்கியத்திற்கும் ஆற்றிய பங்களிப்புகள் பக்தர்களின் மனதில் என்றும் நீங்கா இடம் பெற்றிருக்கும்.*

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

*Printed and Published by:* A. Kumar Raja,
20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



21 மார்ச் 2025 வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில்
நடைபெற்ற ஸ்ரீ வித்யா ஹோமக் காட்சிகள்

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

